பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 07 ஞாயிற்றுக்கிழமை 19.02.2023 கதிர் 103

**இது ரகசியம் அல்ல!**

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கான தமிழ் அரசுக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. அதற்குப் பொறுப்பாக கட்சியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட முகவரான மருத்துவர் சிவமோகன் தான் ☞2

# இலங்கைக் கடலில் மீன்பிடிக்க இந்தியப் படகுகளுக்கு அனுமதி

## 50 குதிரை வலு இயந்திரங்களுக்கு வாரத்தில் இரு நாள்கள் வழங்க ஏற்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் நாட்டுப் படகுகள் வாரத்தில் இரண்டு நாள்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

கடற்றொழில் அமைச்சு வட்டாரங்கள் மூலம் காலைக்கதிர் இதனை உறுதிப்படுத்தியது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் புதுடில்லி செல்லவுள்ளார். அப்போது - இது தொடர்பில் இரு தரப்புக்களும் பேசி ஒரு தீர்க்கமான முடிவை எட்டும் வகையில் அல்லது ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் காலைகதிர் உறுதிப்படுத்தியது. ☞2

## இராமேஸ்வரத்தில் நேற்றுப் பதற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.18

இலங்கையில் இருந்து 10ற்கும. மேற்பட்ட படகுகள் ஒரே நேரத்தில் அரிச்சல்முனைப் பகுதிக்குள் ஊடுருவுவதாக பரவிய தகவலினால் இராமேஸ்வரம் பகுதியில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகத்தின் இராமேஸ்வரம் மாவட்டம் அரிச்சல்முனையை அண்டிய பகுதியில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் தனியாரால் உயர்ந்த பிரதேசத்தில் ஓர் தொலை நோக்கி பொருத்தப்பட்டுள்ளது.

அந்தத் தொலை நோக்கியின் மூலம் பகல்வேளைகளில் ☞2



## மின் கட்டண உயர்வை கண்டித்து புத்தளத்தில் தீப்பந்தப் போராட்டம்

மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளத்தில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அரசு மின்சாரக் கட்டணத்தை 66 சதவீதம் அதிகரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து புத்தளம் வான் சந்தியில் தீப்பந்தங்களுடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசுக்கெதிராக எழுதப்பட்ட சுலோகங்களை ☞2

## ஏ-9 வீதி விபத்தில் நேற்று 13 வயதுச் சிறுமி இறப்பு

ஏ9 வீதி பூனாவ பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் பூனாவ பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிக்குக் குறுக்கே ஓடிய நாயை மோதுவதைத் தவிர்க்க முயன்ற வாகனச் சாரதி நிலை தடுமாறி அருகில் நடந்து சென்றுக்கொண்டிருந்த தாயையும் மகளையும் மோதித் தள்ளியது. ☞2

## பெப்ரவரி 23இன் பின்பே தேர்தல் பற்றிய முடிவு

### ஆணைக்குழு தெரிவிப்பு




உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான மேலதிக தீர்மானங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்குப் பின்னர் எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பணம் ☞2

## திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி பரப்புரை தொடங்கிய சி.வி.



தமிழ் மக்கள் கூட்டணி வேட்பாளர்கள் கட்சித் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு யாழிலுள்ள சர்வமத தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரைகளைத் தொடங்குவதற்கு முன்னதாக மதத்தலைவர்களிடம் ஆசி பெற்றுக் கொள்வதாக கட்சியினர் தெரிவித்துள்ளனர். தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் சுடரேற்றி ☞17

## 10 நாள்கள் மியன்மாரில் தங்குவாராம் கோட்டா



மலேசியாவின் கோலாலம்பூருக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 10 நாள்கள் மியன்மாரில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, அவர் சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டு மலேசியா சென்றுள்ளார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ☞2

## 65 உறுப்பினர்களை நீக்க ஐ.தே.க. அதிரடி தீர்மானம்

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த, 65 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ☞17

## அடுத்த வருடம்தான் தேர்தல்

### ரணில் சூசகமாகத் தெரிவிப்பு



பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி தமக்கு விரும்பும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும். ☞17

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தில் இருந்துகொண்டு கட்சியின் விண்ணப்பத்தைதனது உதவியாளரின்மூலம் கொடுத்துவிட அதிகாரிகள் அதனை நிராகரித்துவிட்டார்கள். அங்கீகாரம் அளிக்கப்படாத முகவர் இல்லாத எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்கமுடியாது என்று நிராகரித்துவிட்டார்கள்.

இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குப் போனது தமிழ் அரசுக் கட்சி. "வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம் அதில் வெற்றிபெறுவோம். கரைதுறைப்பற்று பிரதேச சபை தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடும். வெற்றியும் பெறும்" என்ற வீர வசனங்களோடுதான் நீதிமன்றப் படியேறினார்கள். ஆனால் நீதிமன்றம் அந்த மனுவையே தூக்கிக் கடாசிவிட்டது.

வேட்புமனுக்கள் பெறப்பட்ட மற்றைய எல்லா இடங்களிலும் ஒரு நடைமுறை முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் வேறு நடைமுறை இருந்தது, அதாவது ஒவ்வொரு சபைக்கான வேட்புமனுக்களும் ஒவ்வொரு அறையில் வாங்கப்பட்டன, அதுதனால்தான் கொடுக்க முடியாமல் போய்விட்டது என்றுஒருகாரணத்தைக்கூறிக்கொண்டு தான் நீதிமன்றத்தை அணுகினார்கள். ஆனால், தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கு இடமளிக்க மறுத்துவிட்டது. உண்மையும் என்னவென்றால், மருத்துவர் சிவமோகனின் அலட்சியம் மட்டுமே அந்த வேட்புமனு நிராகரிப்புக் காரணம். அவர் தான் அங்கு இருந்த படியேதான் வேறொருவரிடம் வேட்புமனுவைக் கொடுத்துவிட்டார். யார் என்ன செய்துவிட முடியும் என்ற அவரது மிதப்புக்கு உட்பட எல்லோரும் செய்துகாட்டிவிட்டார்கள்.

இப்போது அங்கு எப்படியாவது போட்டியிடவேண்டிய நிர்ப்பந்தத்தில் பின்கதவால் உள்ளே நுழைவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தன்னுடைய ஆட்களைக் கொண்டு அங்கு ஒரு பெயர் அறியாக் கட்சியைக் களமிறக்கி உள்ளது. அதன் வேட்புமனு ஏற்கப்பட்டுவிட்ட நிலையில், அதிலுள்ளவர்களை வெளியேறப்பண்ணிவிட்டு அந்த இடங்களுக்குத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களைப் போட்டியிடச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

அது தொடர்பான பேச்சுக்கள் இன்று காலை 10 மணியளவில் முல்லைத்தீவில் நடக்க இருக்கின்றன. தனிப்பட்ட நிகழ்வொன்றுக்காக வேறொரு இடத்துக்கு வரும் கீம் இதற்காக முல்லைத்தீவுக்கு வருகிறார். சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோரும் அங்கு செல்கிறார்கள். முல்லைத்தீவில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டு என்ன செய்யப் போகிறார்கள் என்பது இந்த மூன்று தலைவர்களாலும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்படவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் பினாமிக் கட்சியின் சார்பில் 24 வேட்பாளர்களின் பெயர்கள் தொகுதி மற்றும் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ளன. ஆனால் அதில் ஒரு தொகுதி மட்டுமே அந்தக் கட்சியின் இலக்கு. எனவே அதிலுள்ள மற்றைய 23 பேரும் போட்டியிலிருந்து விலகிக் கொள்வார் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பார்கள். தேர்தல்களுக்கு இன்னும் 24 நாட்களுக்கு மேல் இருக்கும் நிலையில் அந்த விலகல் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி அவர்கள் விலகியதும் அந்த இடத்திற்கு தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களின் பெயர்கள் அந்தக் கட்சியின் செயலாளரால் பிரதியிடப்படும் என்பதே ஏற்பாடு.

புளொட்டின் பினாமி கட்சியாக இருந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை இப்போது திடீரென 5 கட்சிகள் தமது கூட்டு மற்றும் சின்னம் என்று அறிவித்ததுபோன்றதொரு ஏற்பாடுதான் இதுவும். என்ன, அது தேர்தலுக்கு முன்பே நடந்தது. இது தேர்தலில் வேட்புமனுவை இழந்த பின்னர் நடக்கிறது. இதற்கு முன்னரும் ஒரு தடவை தமிழ் அரசுக் கட்சி இப்படி பின்கதவு வழியாகப் பிரதேச சபைக்குப் போட்டியிட்டிருக்கிறது. எனது ஞாபகம் சரி என்றால் துணுக்காய் சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் போட்டியிட்டிருக்கவேண்டும். உடனடியாக அந்த விவரத்தை சரிபார்க்க முடியவில்லை.

இந்த முயற்சி நல்லபடி முடியும் என்று தமிழ் அரசுக் கட்சி நம்புகின்றது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே!

****

ஒரு காலத்தில் ஜனநாயகக் காவலராக இருந்த ரணில் இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலைக்கூட நடத்த மாட்டேன் என்கிற கொடுங்கோலராகப் பரிமாண வளர்ச்சி அடைந்திருக்கிறார். இந்த நிலையில் அவருக்கு எதிராக எதிர்க் கட்சிகள் அனைத்தும்கூடி என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்பதற்கு திங்கட்கிழமை கொழும்பில் ஒரு கூட்டம் கூட்டப்படுகின்றது. அந்தக் கூட்டத்தை சுமந்திரன்தான் கூட்டுகின்றார். எதிர்க் கட்சிகள் எல்லாம் ரணிலின் நிலைப்பாட்டுக்கு எதிராக இருந்தாலும், தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று நினைத்தாலும் தாமாக ஒன்று சேர அவற்றுக்குள்ள ஈகோ விடாது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டத்தைக் கூட்டினால் ஜேவிபி அதில் பங்குபற்றாது. ஜேவிபி கூட்டினால் மற்றைய கட்சிகள் எவையும் கலந்துகொள்ளாது. சுதந்திரக் கட்சி கூட்டினால் மக்கள் சக்தி கலந்துகொள்ளாது என்றவாறாக நிலைமை இருப்பதால், அனைவருக்கும் பொதுவாக சுமந்திரன் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இதுபோன்ற ஒருங்கிணைப்பாளர் வேலையை சுமந்திரன் ஏற்கனவே செய்துமிருக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து அகற்றும் அரகலய போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதும் அவர் இத்தகைய ஒருங்கிணைப்புப் பணிகளை ஆற்றியிருக்கிறார். அப்போதெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவும் அதில் ஒரு பங்காளராக இருந்திருக்கிறார். அந்தக் கூட்டங்களில் எல்லாம் ஒன்றைப் பேசிவிட்டு பின்னர் ராஜபக்சக்களுடன் சேர்ந்து மக்களுக்கும் சுமந்திரனுக்கும் சேர்த்தே முதுகில் ஓங்கிக் குத்தினார் ரணில். அந்த அனுபவத்தைக் கட்சிகள் இன்னும் மறந்திருக்கமாட்டா என்று நினைக்கிறேன். இந்தத் தடவை என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். அதற்கிடையில் திங்கட்கிழமை அரசுக்கு எதிராகக் கொழும்பில் போராட்டம் என்று ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே அறிவித்திருக்கிறது என்பதும் கொசுறுத் தகவல்.

- இடிமின்னல் -

## இலங்கைக் கடலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் இழுவைமடிப்படகுகள் மற்றும் வத்தை எனப்படும் நாட்டுப்படகுகள் என இரு வகைகளிலும் மீன்பிடி இடம்பெற்று வருகின்றது. இதில் நாட்டுப் படகுகள் 40 முதல் 50 குதிரை வலுக் கொண்ட இயந்திரங்களைப் பயன்படுத்துபவை. இழுவை மடிப் படைகுகள் 150 குதிரை வலு இயந்திரங்களைப் பயன்படுத்துபவை.

இவற்றில் 50 குதிரை வலுவுக்குக் குறைந்த இயந்திரங்களைப் பயன்படுத்தும் படகுகளுக்கு இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிப்பதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பிலேயே பேச்சு நடத்தப்படுவதாகத் தெரிகின்றது.

50 குதிரை வலுவுக்கு மேற்பட்ட இயந்திரங்களைப் பயன்படுத்தும் படகுகள் இலங்கை எல்லைக்குள் மீன்பிடிப்பதற்கான அனுமதி ஒருபோதும் வழங்கப்படாது என்றும் கடற்றொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம் இவ்வாறு இலங்கைக் கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும்பட்சத்தில் அதற்காக அறவிடப்படும் பணத்தை திறைசேரிக்குக் கொண்டு செல்லாமல் வடக்கு மாகாண மீன்வர்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் வழிமுறைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய கடல்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு.அண்ணாமலை ஆகியோர் இது தொடர்பில் இலங்கை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு பேசியிருந்தார்கள் என்றும் ஆனால் இழுவைமடிப் படகுகளுக்கு ஒருபோதும் அனுமதி தரமுடியாது என்று அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இராமேஸ்வரத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டால் தலைமன்னாரில் பொருத்தப்பட்டுள்ள காற்றாடிகள் மூலம் தலைமன்னாரிற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் உள்ள தீட்டுக்கள் வரையில் தென்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறுள்ள தொலை நோக்கியில் நேற்று மாலை பார்வையிட்ட சமயம் சிறிய பிளாஸ்ரிக் படகுகள் 10ற்கும் மேற்பட்டவை இலங்கை – இந்திய எல்லைப் பகுதிக்கு அண்மையில் பயணித்துள்ளன. இதனால் இந்த தகவல் உடனடியாக பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. அவர்களும் அந்தத் தொலை நோக்கிமூலம் பார்த்து அதனை உறுதிப்படுத்தினர். இலங்கையில் இருந்து பெருந்தொகை அகதிகளே படையெடுத்து வருகின்றனர் எனக் கருதி கடற்கரைக்கு அதிக பொலிசார் அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடற்கரைக்கு சென்ற பொலிஸார் நீண்ட நேரமாகியும் படகுகள் கரையை அண்மிக்காது இந்திய எல்லைக்குள் நிற்பதனை அவதானித்து படகுகளை அண்மித்து ஆராய்ந்தபோது அவை அனைத்தும் கன்னியாகுமாரிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களிற்குச் சொந்தமான படகுகள் என்பதனை உறுதி செய்தனர்.

## மின் கட்டண உயர்வை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்தியவறும் முழக்கங்களை எழுப்பியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மின்சாரக் கட்டணத்தை கடுமையாக அதிகரித்தமைக்காக அவர்கள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடுமையாக விமர்சித்தனர்.

## ஏ-9 வீதி விபத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார். அவரது தாயார் மற்றும் கார் சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

விபத்தில் உயிரிழந்த சிறுமியின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், படுகாயமடைந்தவர்கள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

## பெப்ரவரி 23இன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதில் உள்ள தடை தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளார் என்று அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இதன்படி, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதி வழங்குவதில் உள்ள சிரமங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்க அரசு எடுத்த நிர்வாக தீர்மானம் குறித்து நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணையகத்துக்கு அறிவித்திருந்தார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் நிறுத்தப்பட்டதன் விளைவாக ஏற்கனவே பெப். 22, 23, 24 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபை அஞ்சல் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட திகதிகளில் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகளை ஆணைக்குழுவுக்கு வழங்காத காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## 10 நாள்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், கோட்டாபய மியன்மார் சென்றுள்ளார் என்றும், அங்கு அவர் விகாரைகளில் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதன் பின்னர் அவர் அங்கிருந்து சீனாவிற்குச் செல்லக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில், கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசேட விருந்தினர் முனையத்தின் ஊடாகவோ, சாதாரண பயணிகள் முனையத்தின் ஊடாகவோ, பட்டுப்பாதை அல்லது தங்கப்பாதை ஊடாகவோ செல்வதற்கான வாய்ப்பு இருந்த போதும், அவர்கள் சரக்கு முனையத்தினூடாக மலேசியாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.



# சிவராத்திரியன்று மாட்டுக் கன்றின் தலையை வெட்டி வீசிய விஷமிகள்!




சிவராத்திரி தினமான நேற்று (சனிக் கிழமை) மாட்டு கன்று ஒன்றை வெட்டி, அதன் தலையையும், இதர மாமிச கழிவுகளையும் வீதியில் விஷமிகள் வீசி சென்றுள்ளனர்.

கோண்டாவில், முத்தட்டுமட வீதியில் காலைமாமிசகழிவுகள்வீசப்பட்டுகாணப்பட்டமையை அடுத்து, அப்பகுதி மக்களால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டது. அதனை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், நல்லூர் பிரதேச சபை கழிவகற்றும் வாகனத்தின் ஊடாகக் கழிவுகளை அகற்றினர்.

சிவராத்திரி விரத நாள் அன்று மாட்டு கன்றை வெட்டி அதன் தலையை வீசி சென்று இருந்தமை அப்பகுதி மக்களிடம் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

விமிகளின் இந்த செயற்பாட்டுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸாரிடம் மக்கள் கோரியுள்ளனர்.




# மாவைக் கந்தனுக்கு ஐம்பொன்னால் சிலை!



சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று (சனிக்கிழமை) யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு 20 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐம்பொன்னாலான சிவகாமி சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

ஐடியல் மோட்டர்ஸ் (மகேந்திரா) நிறுவனத்தின் நிறுவுநர் நளின் வெல்கம இந்த சிவகாமி சிலையை ஆலயத்துக்கு பரிசளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மக்களாட்சிக்கான தேர்தல் இன்றி பொருளாதார மீட்சியும் இல்லை

**அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியாளர்கள் சதி செய்து ஒருவாறு தேர்தலை நிறுத்தக் கூடிய நிலமையை ஏற்படுத்திவிட்டார்கள். இனி இந்த வருடத்தில் தேர்தல் நடக்காது, அடுத்த வருடம்தான் தேர்தல் என்பதையும் ரணில் பூடகமாக நேற்றுக் கூறிவிட்டார்.**

**“நாட்டின் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. நாட்டை அராஜகத்துக்குள் தள்ள இடமளிக்காமல் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கின்றோம். நாட்டின் பொருளாதாரம் விரைவில் வழமைக்குத் திரும்பும் என்று நம்புகின்றேன். இந்த வருட இறுதிக்குள் நாட்டில் மக்களாட்சி (ஜனநாயகம்) தளராமல் செயற்படும் சமூகம் கட்டியெழுப்பப்படும்.**

**நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு மக்கள் துன்பப்படுவதற்கு இடமளிக்கப்படப் போவதில்லை. அதற்கான சகல தீர்மானங்களையும் அரசு மேற்கொள்ளும். நான் மக்களாட்சியை மதிக்கும் தலைவர். ஆனால், மக்களாட்சிக்கு முதலில் பொது அமைதி தேவை. அதற்குச் சட்டம், ஒழுங்கைப் பேணுவது அவசியம்.**

**பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி தமக்கு விரும்பும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும்” – என்று ரொட்டரிக் கழகத்தின் நிகழ்வில் உரையாற்றும்போது ரணில் கூறியிருக்கிறார்.**

**அவரது பேச்சு வேடிக்கையாக இருக்கின்றது. இன்று அவருக்கு எதிராக நடக்கும் போராட்டங்கள் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்றால், அன்று கோட்டாபயவுக்கு எதிரான போராட்டங்கள் எல்லாம் என்ன? ஆட்சியைப் பிடிக்கும் வரை அந்தப் போராட்டங்கள் எல்லாம் அவருக்கு சட்டம் ஒழுங்குக்கு உட்பட்டவையாக இருந்தன. பதவிக்கு வந்த பின்னர்தான் அவை வன்முறையானவையாகவும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் மாறி இருக்கின்றன. இந்த லட்சணத்தில் அவர் தன்னை மக்களாட்சியை மதிக்கும் தலைவர் என்றுவேறு சொல்லியிருப்பதுதான் வேடிக்கை.**

**எப்படியிருந்தாலும் சட்டம் ஒழுங்கு என்ற பெயரால் மக்களாட்சி மாண்பை தான் மதிக்கப்போவதில்லை என்பதையும் தேர்தலை இந்த வருடத்திற்குள் நடக்கப்போவதில்லை என்பதையும் ரணில் உறுதிப்படுத்தியிருக்கிறார்.**

**ரணில் சொல்வதைப் போல பொருளாதார நெருக்கடிதான் தேர்தலை நடத்தத் தடையாக இருக்கிறது என்றால், அதனை அவர் வெளிப்படையாகவே மக்களுக்கு அறிவித்து தேர்தலை ஒத்திவைத்திருக்க முடியும்.**

**ஆனால், கள்ள வழிகள் மூலம் அவர் 21 தடவைகள் தேர்தலை நிறுத்த முயன்றார் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றன. நேர்மையான, மக்களாட்சியை மதிக்கும் ஒரு தலைவராக இருந்திருந்தால் அவர் அப்படிச் செய்திருக்க மாட்டார்.**

**அவரிடம் இருப்பதெல்லாம் தேர்தல் தோல்விப் பயம் மட்டுமே. தான் தொடர்ந்தும் அதிகாரத்திலிருக்க ஆசைப்பட்டு மட்டுமே அவர் இதனையெல்லாம் செய்கிறார்.**

**பொருளாதாரத்தை மீட்பதற்காக மக்கள் விரும்பாத முடிவுகளைத் தான் தொடர்ந்து எடுப்பார் என்று நாடாளுமன்றத்தில் மாசி மாதம் 8ஆம் நாள் ஆற்றிய உரையில் அவர் தெரிவித்திருந்தார்.**

**அதில் ஒன்றுதான் தேர்தலை ஒத்திப்போடுவதும் என்பதை நேர்மையாக மக்களிடம் எடுத்துச் செல்லத் திராணியற்றுத்தான் அவர் கடந்த சில வாரங்களாக அரச அச்சகம், திறைசேரி, நிதி அமைச்சு என்று மாறி மாறி பந்தடித்து விளையாடி வருகின்றார்.**

**அதிலிருந்தே அவருக்கு இருப்பது நேர்மையான நோக்கம் இல்லை, தோல்விப் பயம் மட்டுமே என்பது தெளிவாகிறது.**

**மக்களாட்சி மாண்பைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு பொருளாதார மீட்சியின் பின்னர் அதனை மீளப் பெற்றுவிடமுடியும் என்று நம்புவது முட்டாள்தனம். நீண்ட நெடிய மக்களாட்சிப் பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையில் பொருளாதார மீட்சி மக்களாட்சியைப் பேணாமல் சாத்தியப்படாது. அது குழப்பங்களுக்கும் சட்ட ஒழுங்கு மீறல்களுக்கும் மட்டும்தான் வழி வகுக்கும்.**

**மீண்டும் போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் கடையடைப்புகளும் நடக்கும்பட்சத்தில் பொருளாதாரம் எப்படி நிமிர முடியும்? மக்களாட்சியும் பொருளாதார மீட்சியும் சமாந்திரமாகப் பயணிக்கவேண்டியவை. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. அதற்கு இந்தத் தேர்தலை நடத்துவது முக்கியமானது.**

# தபால்மூல வாக்குச் சீட்டுக்களை அச்சிட 5 கோடி ரூபாவையாவது வழங்குங்கள்!

## அச்சகத் தலைவர் கங்கானி லியனகே கோரிக்கை



வரவு – செலவு திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 5 கோடி ரூபாவேனும் வழங்கப்பட்டால், குறிப்பிட்ட தினத்திலிருந்து 5 நாள்களுக்குள் வாக்குச் சீட்டுக்களை அச்சிட்டு வழங்க முடியும்.

சுற்று நிரூபத்தால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், உரிய பாதுகாப்பு வழங்கப்படாமை என்பவற்றின் காரணமாகவே வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் தாமதமடைந்துள்ளன என அரச அச்சகத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகளுக்கு 40 கோடியே 15 லட்சம் ரூபா செலவாகும் என்று கணிப்பிடப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவிடம் 50 சதவீதம் முற்பணம் கோரப்பட்டது. எவ்வாறிருப்பினும், அதில் 4 கோடி ரூபா மாத்திரமே கிடைக்கப் பெற்றது.

இந்நிலையில் அரச நிறுவனங்கள் எவையும் கடனில் சேவை வழங்கக்கூடாது என சுற்று நிரூபம் வெளியிடப்பட்டது. அதற்கமைய தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகளுக்கான நிதி தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த 13 ஆம் திகதி நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கு இதுவரையில் பதில் கிடைக்கப் பெறவில்லை.

எவ்வாறிருப்பினும், தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகளை தாமதப்படுத்தக் கூடாது என்பதற்காக அவை எம்மால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

எனினும், இதற்கான பாதுகாப்பை வழங்குமாறு கடந்த 14 ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அதற்கும் இன்னும் பதில் வழங்கப்படவில்லை.

இதற்கு முன்னர் எந்தவொரு தேர்தலின் போதும் பலத்த பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டதில்லை. ஆனால், தற்போது வெறுமனே 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் 75 சதவீதம் நிறைவடைந்துள்ளன. பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தால், இன்றுடன் அச்சு நடவடிக்கைகளை முழுமையாக நிறைவடையச் செய்திருக்க முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சுமார் ஒரு கோடியே 80 லட்சம் வாக்குச் சீட்டுக்களை அச்சிட வேண்டியுள்ளது.

இதில் 3 சதவீதம் தபால் மூல வாக்களிப்புக்கானவை ஆகும். வரவு – செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 5 கோடி ரூபாவேனும் வழங்கப்பட்டால், குறிப்பிட்ட தினத்திலிருந்து 5 நாள்களுக்குள் வாக்குச் சீட்டுக்களை அச்சிட்டு வழங்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்தோடு முழுமையாக ஒட்டுமொத்த வாக்குச் சீட்டுக்களையும் அச்சிடுவதற்கு 20 – 25 நாள்கள் தேவையாகும். இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் காலத்தில் அரச அச்சகத்தின் செயற்பாடுகள் கால தாமதமானமை கிடையாது.

எனினும், இம்முறை சுற்று நிரூபத்தின் ஊடாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் உரிய பாதுகாப்பு கிடைக்கப் பெறாமையால் இந்த நடவடிக்கைகள் கால தாமதமடைந்துள்ளமை கவலைக்குரியது.

மேலும், இது தொடர்பில் எனக்கு வேறு எந்த வகையிலும் அழுத்தம் பிரயோகிக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் மீள ஆரம்பித்தபின் அச்சகத்துக்கு பாதுகாப்பு!

## பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிப்பு



அரச அச்சகத்தால் பாதுகாப்பு கோரப்பட்டுள்ள போதிலும் , தற்போது வாக்கு சீட்டு அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் மீண்டும் அந்தப் பணிகள் ஆரம்பமானதன் பின்னர் உரிய நேரத்தில் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அரச அச்சகத்தால் பொலிஸ் திணைக்களத்திடம் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எந்தவொரு தேர்தலுக்கும் பொலிஸ் திணைக்களத்தாலேயே பாதுகாப்பு வழங்கப்படும். தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைக்கமையயே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இந்நிலையில் அரச அச்சகம் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறிருப்பினும் நிதி நெருக்கடிகள் காரணமாக வாக்கு சீட்டு அச்சிடும் பணிகள் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே, வாக்கு சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பமானதன் பின்னர் நாம் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு பாதுகாப்பு வழங்கும் போது நீண்ட காலத்துக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த வேண்டியேற்படும். இதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை பிரத்தியேகமாக நியமிக்க வேண்டிய தேவையும் காணப்படுகிறது.

இவ்வாறான அரச நிறுவனங்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும் , கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பொலிஸ் திணைக்களத்தாலேயே தீர்மானிக்கப்படும். எனவே, இந்தக் காரணிகள் தொடர்பில் ஆராய்ந்து பாதுகாப்பை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென தம்பட்டம் அடிப்போர் செய்தசேவை தொடர்பில் மக்கள் தேடிப்பார்க்க வேண்டும்!

ராஜபக்ஷர்களால் வங்குரோத்தடையச் செய்யப்பட்ட எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால் பணமும், டொலர்களும், முதலீடுகளும் தேவைப்படுவதாகவும் இதை விடுத்து வேறு வழியில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஹங்குரன்கெத பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவிக்கையில் –

வங்குரோத்தான நாட்டை மீட்க தீர்வு தருவோம் என நாடு முழுவதும் கூட்டங்கள் நடத்தி, வீறாப்பு பேசும் சிவப்பு சகோதரர்களுக்கு நாட்டை கட்டியெழுப்பத் தேவையான குறைந்தபட்ச ஏற்பாடுகளோ, தொடர்புகளோ இல்லை எனவும் சர்வதேச ஆதரவின்றி அவர்களால் எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை எம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என தம்பட்டம் அடிக்கும் ஒவ்வொரு கட்சியும் எதிர்க்கட்சியில் இருந்து மக்களுக்குச் செய்த சேவை தொடர்பில் மக்கள் தேடிப்பார்க்க வேண்டுமென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதை தேடிப் பார்த்தால் மக்களுக்கு உண்மையில் யார் சேவை செய்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும் என்றார்.

அத்துடன், வங்குரோத்து நிலைக்குள்ளான நாட்டுக்குத் தீர்வுகளை வழங்குவதாகக் கூறும் மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பித்து கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்கள் கடந்துள்ள போதிலும், எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களுக்காக செய்த பணிகள் தொடர்பாக நோக்கும் போது எதுவும் இல்லை எனவும், எவ்வாறாயினும், மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி, கொவிட் காலத்திலும் அதற்குப் பின்னரும் நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்விக்காக கிட்டத்தட்ட 50 கோடி ரூபா பெருமதியில் மூச்சு மற்றும் பிரபஞ்சம் வேலைத்திட்டங்கள் மூலம் நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.


சஜித்பிரேமதாஸ கூறுகிறார்

எனவே மக்களுக்காக யார் உண்மையில் சேவை செய்கிறார்கள் என்பதை மக்களால் யதார்த்தமாகப் புரிந்துகொள்ள முடியும் எனவும், இந்தத் தேர்தலில் மக்கள் புத்திசாலித்தனமாக முடிவை எடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.







OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM PER CHARGE*
FAAST-F2T
80-85 KM PER CHARGE*
FREEDOM
70-75 KM PER CHARGE*
Rs.550,000/- Upwards
Available Colors :
conditions apply*
India's fastest growing EV brand
2 YEARS WARRANTY*
3 FREE SERVICE*
*Range varies from mode to mode selected.
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# ஈழத்தின் வெந்து தணிந்தது காடு


'விஷம் குடிச்சா விழுந்துதான் சாவியள்இ ஆனால் சைனட் அடிச்சா செத்துத்தான் விழுவியள்' இது எங்கட கதை!

யுத்தம் என்றதும் தற்போது பலருக்கும் நினைவில் வருவது உக்ரைன் – ரஷ்ய போரே.

ஆனால் சில வருடங்களுக்கு முன் இலங்கையில் இன ரீதியில் பல வேற்றுமைகளையும் மன ரீதியில் பல தாக்கங்களையும் பெரும் இழப்புக்களையும் ஏற்படுத்தியது ஈழப் போர் என்றால் இதை யாரும் மறுத்து விட முடியாது. ஆம் ஈழம் எப்போதும் பெரும் சர்ச்சைக்குரிய பேசு பொருளாகவே காணப்படுகிறது. இதற்கு காரணம் யார்? ஏன் என்றது நாம் பலரும் பல வருடமாக தேடும் ஒன்றாக இருந்தாலும் இதற்கான பதில் எப்போதும் மர்மமாகவே இருக்கின்றது.

சம உரிமையும் சுதந்திரமும் கேட்டு போர் செய்து தோற்று (தோற்கடிக்கப்பட்டு) காலம் போனதும் இது தான் விதி என சனம் கொஞ்சம் பெருமூச்சு விடத் தொடங்க பழச கிண்டுற கதையா இப்ப பல கதைகள் கிளம்பிக் கொண்டு வருது மனசில ஏக்கம் இருந்தாலும் இதற்கு பின்னால இருக்குற அரசியல யோசிச்சு பார்த்தால் தொண்டையில தண்ணியும் இறங்காது. அது ஒரு புறம் இருக்கட்டும்.

ஈழத்தின் முக்கியதொரு வளர்ச்சியாக இன்று பேசப்படுவது ஈழத்து சினிமா தான். எங்கட கதைய எங்கள விட்டால் யார் எடுக்கிறது என்ற கேள்வியோட சினிமா மீதான ஆழ்ந்த தேடலுக்கு பதிலா இன்றைக்கு ஈழத்து சினிமாவின் முக்கிய ஒரு இயக்குனராக வலம் வருகின்றார் இயக்குனர் மதிசுதா. அவரது படைப்புக்கள் ஒரு சினிமா ரசிகராக ஈழத்து சினிமாவின் ஆழ்ந்த பக்தையாக தொடர்ந்து வரும் போது எம்மவர் சார்ந்த விடயங்களை நாங்கள் பேசாமல் இனி யார் பேசப் போறது, எங்களோட சந்ததி கடந்து வந்த பாதையை




நா.சாருமதி
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

படைப்பாக்கம் மூலம் ஆவணப்படுத்தாமல் போனால் இனி வாற சந்ததிக்கும் சரி ஈழத்தை சர்ச்சை பொருளாக பேசிக் கொண்டிருப்போருக்கும்சரிஇ வெளிநாடுகளுக்கும் சரி யார் கொண்டுபோய் சேர்ப்பது என்ற கேள்விக்கு பதிலாக தான் ஒரு அடையாளப்படுத்தலாக உருவாகியுள்ளது ஈழத்தின் வெந்து தணிந்தது காடு திரைப்படம் ஆகும்.

ஈழம் என்பது மூன்று எழுத்துத்தான் ஆனால் உலகில் பேசப்பட்டு வரும் முக்கிய வார்த்தை அது. ஈழத்து சினிமாவை பொறுத்த வரைக்கும் யுத்தத்திற்கு முன்னர் இருப்பதைவிட இன்று புதிய படைப்பாளிகளைக் களம் கண்டுள்ளது என்றால் மிக ஆகாது. சினிமாவை மூச்சாக நேசிக்கும் ஒருவர் ஈழ மண்ணின் வடுக்களைக் காட்சிப்படுத்த, ஆவணப்படுத்த நினைக்கும் போது அது தொடர்பில் அவரின் மன ஓட்டம் எண்ணப்பாடுகள் சிறியவள் ஆனாலும் எனக்கு ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது. வெந்து தணிந்தது காடு திரைப்படத்தை பொறுத்தவரைக்கும் அதற்கான ஆயத்தம் முதல் அதன் வெளியீட்டுக்கு பின்னரான தற்போதைய நிலை வரை ஒரு படைப்பாளியின் ரசிகையாக ஊடகத்துறை மாணவியாக மதிசுதா அவர்களை முன்மாதிரியாக தொடர்ந்து கொண்டிருப்பது பெருமையானதாகவே இருக்கின்றது. இந்தத் திரைப்படம் வன்னியை மையமாகக் கொண்டு அங்கு நடந்த இறுதியுத்த காலத்தில் ஒரு குடும்பத்தில் நடந்த யதார்த்த வாழ்வை கதை ஓட்டமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஈழத்தில் யுத்தம் என்பது சமூக மட்டத்தில் பாரிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது எனினும் யுத்தத்திற்குள் இருந்தவர்களை தவிர அதன் வடுக்களையோ அதன் ரணங்களையும் மற்றவர்களுக்கு கேட்டதன் மூலமே அறிய முடிந்தது.




இந்தப் படைப்பு ஊடாக ஈழ யுத்தத்தின் இறுதி காலப்பகுதியில் வன்னியில் இருந்தவர்களை தாண்டி எனைய மக்களுக்கு அந்த யுத்தம் தொடர்பான அனுபவத்தை ஏற்படுத்தும் ஒரு படைப்பாகவே நான் காண்கின்றேன். காரணம் திரைப்படத்தை பார்த்துவிட்டு மலையக சகோதரிகள் கூறிய விடயத்தை அவதானித்த போது 'யுத்தம் என்று கேள்விப்பட்டிருக்கிறம் ஆனால் அதை உணரும் சந்தர்ப்பத்தை இந்த வெந்து தணிந்தது காடு படம் கொடுத்துள்ளது யுத்தம் என்பது இவ்வளவு வலிகொண்டிருந்ததா என இன்றுதான் தெரிகிறது' என்றனர். மற்றொருவர் 'மீண்டும் அந்த யுத்தத்தில் வாழ்ந்த அனுபவத்தை நினைவுகளை கண்முன்னே காட்டியது' என்றார். இதுதான் ஒரு படத்தின் வெற்றி என்று நான் எண்ணுகின்றேன். ஏனெனில் அந்த சூழலில் வாழ்ந்தவர்களுக்கு நினைவூட்டுவதாக இருப்பது மட்டுமன்றி அறிய முற்படுவோருக்கு உணர்வு ரீதியில்ஒருபடைப்புதாக்கத்தை ஏற்படுத்துமேயானால்அதுவே படைப்பாளியின் வெற்றி.

கதை பற்றி நோக்கும் போது ஒரு வயோதிப தாய் அவரின் இரண்டு மகன்கள் ஒரு மகள் பேரப்பிள்ளைகள் என கூட்டு குடும்பமாக வாழ்கின்ற ஒரு வாழ்வியலில் யுத்தம் என்பது தாக்கம் செலுத்த இடப்பெயர்வுகளைச் சந்தித்து ஒரு இடத்தில் இருக்கும் போது அங்கு நடந்திருக்கின்ற விடயங்களை உயிரோட்டமாக காட்டியுள்ளது இந்த திரைப்படம். யுத்தம் தொடர்பில் பலருக்கும் பல அபிப்பிராயங்கள் இருக்கலாம் ஆனால் ஒரு படைப்பாளி அவருக்கு உருவாகும் எண்ணங்களை படைப்பு மூலம் வெளிக்கொணரும் போது சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தாத அல்லது குறித்த சமூகத்திற்கு இழுக்கு ஏற்படாத ஒரு படைப்பையே கொண்டு வர சிந்திப்பார். இந்தத் திரைப்படம் தொடர்பில் பல விமர்சனங்கள் காண முடிகிறது. ஆனால் ஈழத்து சினிமாவின் வளர்ச்சி பாதையில் விமர்சனங்கள் எப்போதும் முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. ஒரு படைப்பாளிக்கு விமர்சனம் என்பது உந்து சக்தியாக அமைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு தவிர ஒரு படைப்பின் பின்னால் உள்ள உழைப்பை கொச்சைப்படுத்துவதாக இருக்கக் கூடாது. அந்த வகையில் எனக்குத் தோன்றுவது மதி சுதா எடுத்துக் கொண்டது ஆவணப்படம் அல்ல திரைப்படம் என்பதாகும். திரைப்படம் என்பது உண்மை சம்பவத்தை தழுவி வந்த போதும் அதில் உயிரோட்டத்திற்காக கற்பனை கலப்பது என்பது ஒரு படைப்பாளியின் படைப்பாக்கத்திறனே ஆனால் முன்னுக்குப் பின் முரணான சில விடயங்களை காண முடிகின்றது அது ஒரு இயக்குனராக படைப்பாளியாக அவரது கருத்தியல் எமக்கு புரியாது போனாலும் ஒரு சமூகத்தை நெருடுவதாக அமைந்ததா இல்லையா என்பது குறித்த விடயத்தோடு தொடர்புபட்ட பரிச்சயமானவர்களுக்கே அது அதிக புரிதலை கொண்டிருக்கும். என் பக்கத்தில் விமர்சனம் உள்ளதையும் தாண்டி நிறைய முன்மாதிரிகளையே இந்த படம் கொண்டு வந்துள்ளது. ஒரு ஐ – போன் ஊடாக திரைப்படம் எடுப்பது என்பது தரம்இ பெறுதி என்ற அடிப்படையில் சாத்தியமானதல்ல இருப்பினும் கொரில்லா சிஸ்டம் முறையில் திரைப்பட குழுவை களத்திலே தங்க வைத்து அதற்கான பயிற்சிஇ பணியாயத்தங்களைச் செய்து ஐ – போன் மூலம் திரைப்படத்தை பதிவு செய்து சிறந்த ஒரு படைப்பாக இன்று நமக்கு கண்முன்னே காட்டியுள்ளார் மதிசுதா. ஈழத்து சினிமாவை பொறுத்தவரைக்கும் ஒரு படைப்பை தயாரிப்பு செய்வதற்கு முன்வருவோரின் எண்ணிக்கை மிகக் குறைவு. அந்த வகையில் தனது படைப்பு உருவாக்கத்துக்கான நிதியை மக்களிடத்திலே இருந்து கிரவுட் பண்டிங் முறையில் திரட்டி செய்வதென்பது எளிதான வியம் அல்ல. இருப்பினும் அதையும் செய்து காட்டி நமது சினிமாவின் முக்கிய மைல் கல்லாக வெந்து தணிந்தது காடு திரைப்படத்தை எங்களது பார்வைக்கு தந்துள்ளார் மதிசுதா.



# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 19th of febuary 2023**


**We welcome students' articles in word for publication**

**-Editor-**


kalaikkathiredu@gmail.com


## *Read the following passage and Answer: the question that follows.*



The Tiger, one of the world's most iconic and recognizable animals, is in danger. The tiger population has decreased by over 30% in just the past decade, largely due to deforestation and poaching for their valuable fur skins. This decline may have serious consequences not only for tigers but also for other wildlife populations that rely on them as predators or prey.

Tigers are endemic to Asia and Southeast Asia, with an estimated 3,900 remaining in the wild today (down from 10,000 a century ago). With so few tigers left in the wild and increasing demand for their skins, pelts, bones etc., it is essential that we do all we can to safeguard this magnificent animal.

1. What is one of the world's most iconic and recognisable animals?

--------------------------------------------------------------------------

2. How much has the tiger population decreased in the past decade?

--------------------------------------------------------------------------

3. How many tigers are in the wild today?

--------------------------------------------------------------------------

4. What is it essential that we do all we can to protect the tiger?

--------------------------------------------------------------------------



Oscar Wilde, a giant with long hair, a bottle green fur-lined overcoat, and a spherical seal skin hat on his head, arrived in New York on January 2nd, 1882, as part of a lecture tour. He was surrounded by reporters who asked him pointless questions like how he wanted his eggs fried, much to his annoyance. How were his fingernails cut? What temperature did he prefer for his bath? His responses exhibited a complete lack of interest.

However, the customs officer greeted him with the typical question when he came ashore: "Have you anything to declare?" No, I have nothing to declare (pause) but my genius, Wilde retorted. Few statements have ever spread as swiftly and extensively across history as that one.

1. Describe two characteristics of Oscar's physical look in New York.

--------------------------------------------------------------------------

2. What brought him to New York?

--------------------------------------------------------------------------

3. Oscar Wilde had no desire to respond to reporters' inquiries. Why?

--------------------------------------------------------------------------

4. What does Oscar Wilde's response to the questions posed by the customs officer reveal?

--------------------------------------------------------------------------

5. Find a word in the passage that describes a person's extraordinary abilities.

--------------------------------------------------------------------------



Tourism is one of the fastest-growing sectors in the global economy, and it's expected to continue growing at a significant rate throughout the next decade. This sector has long been heralded as a potential driver of growth for economies around the world, and there are many reasons why this is true.

First and foremost, tourism provides much-needed jobs and contributes significantly to national GDPs. It's also an important source of revenue for large and small businesses; moreover, it generates considerable sums of tax revenue worldwide. In short, tourism has many benefits that go far beyond simply providing people with income or generating new business opportunities.

1. What is one of the fastest-growing sectors in the global economy?

--------------------------------------------------------------------------

2. What does tourism provide?

--------------------------------------------------------------------------

3. What does tourism generate worldwide?

--------------------------------------------------------------------------

4. What does tourism provide people with?

--------------------------------------------------------------------------

**"konwledge isn't free. You have to pay attention"**

**Read the following passage and Answer: the question that follows.**

# NIAGARA FALLS



The first people arrived in the Niagara region, between what is now New York State and the province of Ontario in Canada, about 12,000 years ago. These were the Clovis people, and they arrived just in time to witness the very beginning of the Falls. After the time of the Clovis came the Woodland En, during which the entire region was covered by forest. For many hundreds of years, the Niagara region was inhabited by several native tribes: the Iroquois, the Huron, the Petun, and the Neutral. The ane Niagara comes from the native Iroquois name for the river-Onguara.

In the early 17 century, the first European settlers came to the area. The Niagara region was important in the War of 1812 (between the United States and Canach), and the banks of the Niagara River still hold many memories of that war. Tourism travel around Niagara Falls began in 1820. Over 180 years later, tourism is still the dominant industry!

The Niagara Falls are split into two main parts: the Canadian Horseshoe Falls, which fall 170 feet (52 meters) into the Maid of the Mist Pool, and the American Falls, which fall from 70 to 115 feet (about 21 to 34 meters) to the rocks below. More than 188,000 cubic meters of water go over the falls every minute during the main tourist hours. That's a lot of water!! The rest of the fow is removed from the river before it gets to the Falls, and is shared equally between Canada and the United States for hydroelectric power. Hydroelectric power is electricity generated from moving water. The total acnerating capacity of the Niagara River is about 5 million horsepower (4.4 million kilowatts).

Niagara Falls are not the world's tallest falls, but they are the biggest. No other waterfall in the world has as much water flowing over it per minute as Niagara Falls.

**1. The first people that saw Niagara Falls were**

a) European settlers b) the Iroquois
e) the Huron and Petun d) the Clovis people

**2. The beginning of Niagara Falls was**

a) 1,200 years ago b) 12,000 years ago
c) 20,000 years ago d) 120 years ago

**3. Where are the Niagara Falls located?**

a) between the province of Quebec and New York State
b) between the province of Ontario and New York State
c) between the province of British Columbia and Washington State
d) between the province of Manitoba and Texas

**4. The dominant industry in the Niagara region is**

a) hydroelectric power b) wine
c) tourism d) fishing

**5. How much water goes over the falls every minute?**

a) 1,880 m b) 18,800 m
c) 188,000m e) 1,880,000'

**6. What is hydroelectric power?**

a) electricity generated by moving water
b) electricity generated by wind
c) electricity generated by heat from the Earth
d) electricity generated by the sum



The arctic regions are home to Eskimos. They are typically not very tall, but they have strong shoulders and legs. They may be thousands of miles apart, but they speak the same language and can communicate with people from other groups. Mutual consent is required for marriage. They don't hold a formal wedding ceremony. Fishing and hunting are how Eskimos survive. Although the igloo, or snow house, of the Eskimos, is well recognized, in reality, they typically live in wood and turf buildings. Eskimos like carving while they are not hunting and working. They frequently craft exquisite things using ivory and wood.

**1. What kind of people are the Eskimos?**

----------------------------------------------------------------------------

**2. How is a shared language beneficial to them?**

----------------------------------------------------------------------------

**3. How do they support themselves?**

----------------------------------------------------------------------------

**4. What sort of things do they enjoy doing in their free time?**

----------------------------------------------------------------------------



There are more than 4000 species of spiders known to date. Spiders have two body segments and eight legs. They typically consume insects. Spiders use the web they create at various locations to catch prey. The eggs of black ants make an excellent meal for house spiders. Jungle spiders are particular eaters of frogs and small birds.

**1. How many different species of spiders have been identified to date?**

----------------------------------------------------------------------------

**2. What do jungle spiders eat?**

----------------------------------------------------------------------------

**3. Can a spider eat other insects?**

----------------------------------------------------------------------------

**4. What does a home spider eat?**

----------------------------------------------------------------------------

**5. Find a synonym of swallow from the given passage.**

----------------------------------------------------------------------------

# Layla and Majnun:

## The Arabian folk story of a man gone crazy for love



Love, passion, and heartache have been eternal inspirations for poets and storytellers worldwide. The Arab world is no exception, with its canon of traditional poetry full of tales and unrequited love, deception, gallantry and heartbreak, all in the pursuit of a beloved.

Among these spellbinding stories, perhaps the best-known and most influential in Arab culture is the riveting story of Layla and Majnun.

The story of Layla and Majnun is a classic tale of two lovers who were kept apart by societal and familial circumstances. The story is based on the real-life tale of Qays ibn al-Mulawah and Layla al-Amiriya, two lovers from the Bani Amer tribe in Najd in the Arabian peninsula before Islam.

Layla and Qays grew up playing together, but when they reached adolescence, they were separated due to Bedouin customs of gender separation. Despite the circumstances, Qays was already in love with Layla, and being deprived of his beloved sent him into a mental decline that earned him the sobriquet "Majnun", which means "crazy" in Arabic.

"I pass by this town, the town of Layla

And I kiss this wall, and that wall

It's not the love of the town that has enraptured my heart

But of the One who dwells within this town."



Although Layla reciprocated these feelings for Qays, Layla's father did not approve of Qays as a potential suitor for his daughter, so he arranged for her to marry Ward Althaqafi, a wealthy merchant from the Thaqif tribe in Taif. This only made Qays' burning heartbreak worse, throwing him deeper into insanity which made him spend the rest of his days wandering around the desert in permanent sorrow, without hope to return to his family, which made the latter leave food for him in the wilderness for him to survive.

After the death of her husband, Layla sets out to find Qays, but the culture and traditions of pre-Islamic Arabia do not allow this, leaving Layla to die frantic and alone. Qays then finds her grave and passes beside it, and they are finally united in death.

Romantic epics: a hallmark of Arabic literature

The romantic epic is a prominent genre in Arabic literature that has been a significant part of the Arab world's cultural heritage for centuries.

The stories of love that enchanted poets and readers were largely fictional, but some were based on real-life characters. Over time, legends replaced facts, and poetic embellishments in these stories increased, giving them a unique place in the world of literature.


The story of Layla and Majnun became very influential in other cultures, even outside of the Arab world. It is considered one of the most influential folk stories in Azerbaijani, Persian and Turkish cultures. The tale has been retold through various forms of art, including literature, music, and film. The story is significant in the collective Arab imagination and it even inspired colloquialisms of the Arabic language, such as: "Each man cries for his own Layla".

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# இயல்பாய் ஏற்படும் எலும்பு தொடர்புடைய குறைபாடுகள்

இது போன்ற குறைபாடுகள் வாழ்க்கையின் எந்த நிலையிலும் ஏற்படலாம்.

இளம்பிள்ளை வாதம் மற்றும் எலும்பில் ஏற்படும் எலும்புருக்கி நோய் குழந்தைகளில் நொண்டி போன்ற விளைவுகளை ஏற்படுத்தி, நீண்ட காலத்திற்கு நீடிக்கச் செய்யும்.



கருமுதலமைவுடைய அல்லது இயல்பாய் ஏற்படும் தசை பாதிப்படைதல், தசையின் ஆற்றல் மிக்க செயல்பாட்டை பாதிக்கும். பாதிப்பின் அளவு, பாதிப்பின் கடுமையை வைத்து தீர்மானிக்கப்படுகிறது.

தண்டுவட காயங்கள் எப்போதுமே உடல் சார்ந்த இயக்கங்களின் ஆற்றலை கட்டுப்படுத்துவதில் பொறுப்பாகிறது.

கை, கால் போன்றவை வெட்டி எடுக்கப்படும் விபத்துக்களின் விளைவாக எலும்பு தவறான வடிவம் பெற்றிருப்பதுடன், செயலாற்ற முடியாத நிலையும் ஏற்படுகிறது.

### எலும்பு சார்ந்த குறைபாடுகளை அளத்தல்

குறைபாட்டின் கருத்தாழத்தை கை, கால்களின் செயல்பாட்டை கொண்டு அளவிடலாம்.

சில சிறு கை, கால் குறைபாடுகள், ஒரு குழந்தையின் இயக்கத்திற்கு அதிகமான தடைகளை ஏற்படுத்தாது. மற்றொரு வகையில், குறைபாடு மிகவும் கடுமையானதாக, நிலையானதாக இருக்குமானால், குழந்தையின் இயக்கம் மற்றும் சுதந்திரம் மிகவும் அதிகமான அளவில் பாதிப்படையும். எனவே, இது போன்ற நிலைகள் பொருத்துதலில் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

### பாதிக்கப்பட்ட கை, கால் இழந்த குழந்தையின் பண்புகள்

உடல் சார்ந்த குறைபாடுகள் தாழ்வு மனப்பான்மையை இளம் குழந்தைகளிடையே ஏற்படுத்தி விடும். போதும் என்ற நிறைவற்ற உணர்வின் விளைவாக தன் இரக்க (Self Pity) மனப்பான்மை ஏற்படும்.



இது போன்ற குறைபாடுள்ள குழந்தைகள் சுற்றியுள்ளவர்களிடம் இருந்து தம்மை தனிமைப்படுத்திக் கொள்வார்கள். தனியாக தனிமைப்படுத்தப்பட்டு இருப்பது, அவர்கள் சமூகத்தில் தடுமாற்றமுடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பிரதிபலிக்கப்படுகிறது. இன்னும் சிறிது அதிகப்படியாக வளர்ந்த குழந்தை எப்போதும் உள இயல்பு சார்ந்த அதிர்ச்சியான ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரும். ஏனெனில், முரண்பாடுகளை கொண்ட பாதிப்படைந்த உறுப்புகளைக் கொண்ட குழந்தைகளின் பேரார்வங்கள் மற்றும் செயலாக்க திறன்களினால் வளர்ந்த குழந்தைகள் அடிக்கடி உள் இயல்பு சார்ந்த அதிர்ச்சி தரும் ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும்.


கவலை, மிகைப்படியான மனச்சோர்வு, தப்பித்துக் கொள்ளுதல் மற்றும் அதிகமாக வலிய சண்டைக்குச் செல்லுதல் போன்றவற்றை பாதிக்கப்பட்ட மற்றும் உறுப்பு (கை, கால்) இழந்த குழந்தைகளிடையே காணலாம்.

### இழந்த உறுப்புகள் / பாதிக்கப்பட்ட கை, கால் உள்ள குழந்தைகளின் சிறப்பான தேவைகள்

பார்வையற்ற, காது கேளாத குழந்தைகளைப் போல உறுப்பு இழந்து பாதிப்படைந்த குழந்தைகளுக்கு உடல், சமூகம், மனவெழுச்சி மற்றும் கல்வி சார்ந்த சிறப்பான தேவைகள் அவசியமாகின்றன.



உடல் சார்ந்த தேவைகள் என்பது தினசரி செயல்பாடுகளை ஒழுங்கான முறையில் நிறைவேற்றிட உடல் உறுப்புகள் ஒத்துழைக்க வேண்டும். பெற்றோர், குழந்தைக்கு விட அதிகமான அளவிற்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மையோடு செயல்பட வேண்டும். குழந்தைகளின் ஊனத்திற்கு தாங்களே காரணம் என்று பெற்றோர்கள் நினைத்துக் கொண்டு எப்போதும் குழந்தைகள் செய்யும் அதிகப்படியான தவறுகளை மன்னிக்கத் தயாராகிவிடுவர்.




காலம் கடந்து செல்லும் போது, குழந்தை உரிமையாக கோரிக்கை விடுக்க ஆரம்பித்து, உதவியை ஏற்றுக் கொண்டு, பிறகு சுதந்திரமாகவும், தன்னை சார்ந்து நம்பிக்கையுடன் இருப்பதற்கு முயற்சி மேற்கொள்ளாது நிறுத்திவிடும். அறிவியல் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் விளைவாக செயற்கையான உறுப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. உடல் குறைபாடுகளை கடந்து வருவதற்கு செயற்கை உறுப்புகள் உதவுகின்றன. செயற்கை உறுப்புகள் பார்ப்பதற்கும், உபயோகித்து, செயல்படுத்துவதற்கும் சாதாரண நபர்களைப் போல செயல்பட உதவுகிறது.

உடலியக்கம் சார்ந்த சிகிச்சை (physiotherapy) என்பது ஒரு மருத்துவம் சார்ந்த அறிவியல் ஆகும். இந்த அறிவியல் ஊனமுற்ற குழந்தைக்கு முழு உடல் திறனையும் அதிகப்படியாக வெளிப்படுத்த உதவி செய்கிறது. தனிச்சிறப்பு வாய்ந்த கருவிகளான (caliper) கால், கையில்



அழுத்தம் இன்றி நடக்க உதவும் இணைத்துக்கட்டப்பட்ட, வரிச்சல் காலணிகள் (shoes) மற்றும் செயற்கை உறுப்புகளுடன் (கை, கால்) போதுமான, ஒழுங்கு முறையான பயிற்சியும் அளிக்கப்படும்போது மிகச் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும்.

### சமூக மற்றும் மனவெழுச்சிகளின் தேவைகள்

விளையாட்டு என்பது மிக முக்கியமான சமுதாயம் சார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கும் கருவியாகும். பாதிக்கப்பட்ட உறுப்பு கொண்ட குழந்தைகள் எப்போதுமே குழு விளையாட்டு செயல்பாடுகளில் இருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். இது போன்ற வேறுபாடுகளை கண்டறியும் போது சமுதாயம் சார்ந்த செயல்பாடுகளை பாதிப்படையச்செய்யும். குழந்தையானது அதிகமாக மனச் சோர்வுடன், வாட்டத்துடன் ஒதுக்கப்பட்டு இருக்கும். 'நொண்டியான உடலில், செயலிழந்த மனநிலை இருக்கும்' என்ற மூடநம்பிக்கையுடன் உள்ள சமூகத்தின் மனப்பான்மை, பாதிக்கப்பட்ட ஊனமான உறுப்புகளை கொண்ட குழந்தைக்கு தவறான சுய



எண்ணத்தை ஏற்படுத்தி விடும்.

அதிகப்படியாக வலுச்சண்டையிடுதல் மற்றும் கடுங்கோபத்தை திடீரெனவெளிப்படுத்துதல் போன்ற குணங்கள் பொதுவாக கை, கால் ஊனமுற்ற குழந்தைகளிடையே காணப்படுகிறது. அன்புடன் பராமரித்தல் மற்றும் ஒழுங்கு முறையான பயிற்சி ஆகியன சுதந்திரமாக, தன்னையே சார்ந்து இருக்கும் நிலையை உருவாக்குதல் போன்றவைகள் ஊனமுற்ற குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள் ஆகும்.

### கல்வி தேவைகள்

இதில் செய்தல், எழுதுதல், விளையாட்டு, வரைதல்,



வர்ணம் தீட்டுதல், பின்னுதல் மற்றும் நடனம் ஆடுதல் போன்ற சில செயல்பாடுகள், கல்வி தேவையில் சேர்க்கப்பட்டு, ஊனமுற்ற குழந்தைகளை அவற்றில் ஈடுபடச் செய்து செயல்பட வைக்கிறது.

### வறுமை மற்றும் அறியாமை

மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் அறியாமை நிலையில் உள்ள பெற்றோரின் குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்றவை இல்லாத நிலை ஏற்படுகிறது. பெற்றோரிடம் இருந்து ஒழுங்கு முறையான வழிகாட்டுதல் இல்லாமையால் இக்குழந்தைகள், சிறிய திருட்டுக்களில் ஈடுபட ஆரம்பித்து தங்கள் வாழ்க்கைக்கு வழி தேடிக் கொள்கின்றனர். இப்பழக்கம் வளர்ந்து நாளடைவில் பெரிய அளவு சமூக விரோத செயல்பாடுகளில் ஈடுபட வைத்து விடுகிறது.

சக்கர நாற்காலிகள் பயன்படுத்துவதால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்து செல்வதில் முன்னேற்றம் ஏற்படுவதுடன் தன்னம்பிக்கையும் வளரும்.



நீங்கள் எப்போதாவது கை இழந்த குழந்தையை பார்த்துள்ளீர்களா? அக்குழந்தைகள் கால் / வாயின் துணை கொண்டு அழகிய வர்ணங்கள் தீட்டுவதில் சிறந்து விளங்குவது அறியப்படுகிறது. இக்குழந்தைகளின் சுற்றுச் சூழ்நிலையை சிறப்பானதாக அமைக்க வேண்டும்.

# வானம் ஏன் நீல நிறமாகக் காட்சி அளிக்கிறது?



வானம் நீல (Blue) நிறமாகக் காட்சியளிப்பது ஏன் என்ற கேள்வி நம்மில் பலருக்குத் தோன்றியிருக்கும். என்றாவது உங்களுக்கும் இந்தக் கேள்வி தோன்றியதுண்டா?

நம் கண்களுக்கு வெண்மையாகத் தெரியும் சூரிய ஒளியானது, வானவில்லின் அனைத்துநிறங்களையும்உள்ளடக்கிய மின்காந்த அலையாகும். அதாவது, வெள்ளொளியில் அனைத்து நிறங்களும் அடக்கம். வெண்ணிற ஒளியில் அடங்கியுள்ள பல்வேறு நிறங்களைப் பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் தெரிந்துகொள்ளலாம். வெள்ளொளியை ஒரு முப்பட்டகம் (Prism) வழியே செலுத்தும் போது, அதிலிருந்து வெளியே வரும் ஒளி, வானவில்லில் (Rainbow) உள்ளது போல், ஏழு நிறங்களாகப் பிரியும்.

இவ்வாறு, பல நிறங்களை உள்ளடக்கிய சூரியனின் வெண்மையான ஒளி, வளி மண்டலத்தைக் கடந்து பூமியின் நிலப்பரப்பை அடைகிறது. வளிமண்டலத்தின் வழியே கடந்து வரும் ஒளிக் கதிர்வீச்சு, காற்று மூலக்கூறுகளுடன் (Air Molecules) மோதும்போது, சூரிய ஒளி, அம்மூலக்கூறுகளால் அனைத்து திசைகளிலும் சிதறடிக்கப்படுகிறது. இந்நிகழ்வின் போது குறைந்த நீளமுள்ள, அதிவேகமாக அதிரும் நீல நிற ஒளியலை வடிவங்கள் மற்றநிறங்களை விட அதிக அளவில் அனைத்து திசைகளிலும் சிதறடிக் கப்படுகின்றன. அதனால் தான், நம் கண்களுக்கு வானம்நீலநிறமாகக்காட்சியளிக்கிறது.

வளிமண்டலத்தின் வழியே கடந்து வரும் சூரியனின் ஒளிக் கதிர்வீச்சு, காற்று மூலக்கூறுகளுடன் மோதுவதால், அம் மூலக்கூறுகளில் அடங்கியுள்ள மின்துகள்கள் (எலெக்ட்ரான்கள், மற்றும் புரோட்டான்கள்) மேலும் கீழுமாக அலை பாய்கின்றன. அதாவது, அதிர்வடைகின் றன. இவ்வாறு அதிர்வடையும் மின் துகள்கள் மின்காந்தக் கதிர்வீச்சை வெளியிடு கின்றன. இந்தக் கதிர்வீச்சு, மூலக்கூறுகளின் மீது மோதும் சூரிய ஒளியை அனைத்து திசைகளிலும் சிதறடிக்கிறது. இதற்கு ஒளிச்சிதறல் (Scattering) என்று பெயர்.

சூரியனின் வெண்மையான ஒளி, நிறமாலையில் (நிறப்பட்டை – Spectrum) உள்ள அனைத்து நிறங்களையும் (அதாவது, நிறக்கூறுகள்) உள்ளடக்கியது. குறைந்தஅலைநீளம் கொண்ட நீல நிறக் கூறு, நிறப்பட்டையிலேயே அதிக அலை நீளம் கொண்டசிவப்பு நிறக்கூறை விட வேகமாக அதிர்வடைகிறது. இதனால், ஒளியின் நீல நிறப்பகுதியானது, காற்று மூலக்கூறுகளின் மின் துகள்களை வேகமாக அதிர்வடையச் செய்கின்றன. இந்த அதிர்வுகள், சிவப்பு நிறப்பகுதி அதிர்வடையச் செய்யும் மின் துகள்களின் வேகத்தை விட அதிகமாக இருக்கும்.

இவ்வாறு, சூரிய ஒளிக் கதிர்வீச்சின் நீல நிறப்பகுதியால் வேகமாக அதிர்வடையும் மின் துகள்களால் ஏற்படும் மின் காந்தக் கதிர்வீச்சானது, அதற்குக் காரணமான ஒளியின் நீல நிறப்பகுதியை, அதிக அளவில் அனைத்து திசைகளிலும் சிதறடிக்கிறது. சூரியன் வானில் உச்சியில் உள்ள போது, பெரும்பான்மையான அளவில், சூரியனின் வெள்ளொளியின் நீல நிறக்கூறு மட்டுமே சிதறடிக்கப்படுகிறது. இதனால் தான் வானம் முழுவதும் நீல நிறமாக நமக்குத் தோற்றமளிக்கிறது.

ஊதா (Violet), நீலத்தை (Blue) விடக் குறைந்த அலைநீளமுடையது. பிறகு ஏன், வானம் ஊதா நிறமாகத் தோற்றம் அளிக்கவில்லை?

ஊதாநிறம்நீலநிறத்தைவிடக்குறைந்த அளவில் உள்ளதால், காற்று மூலக்கூறுகளால் ஊதா, நீலத்தைவிட அதிக அளவில் சிதறடிக்கப்படுகிறது. ஆனால், நம் கண்கள் ஊதாவை விட, நீல நிறத்தை அதிகமாக உணரக்கூடியவை. அதனால், ஊதாவைத் தவிர்த்து, நீல நிறத்தை நம் கண்கள் உணர்கின்றன. மேலும், ஊதா நிறத்தின் ஒரு பகுதியை, வளிமண்டலத்தின் மேலடுக்கு உட்கிரகிக்கிறது.

இதனால்தான் வானம் ஊதாநிறமாகக் காட்சியளிக்காமல், நீல நிறமாகக் காட்சியளிக்கிறது.

சூரிய உதயம் மற்றும் மறைவின் போது, வானம் ஏன் செந்நிறமாகக் காணப்படுகிறது?

சூரியன் தொடுவானத்தில் உதிக்கும் போது அல்லது மறையும்போது, அப்பகுதியில் சிதறடிக்கப்படாமல் உள்ள சிவப்பு நிறப்பகுதி நம் கண்களுக்குத் தெரிகிறது. ஏனெனில் சூரியன் தொடுவானத்தில், அந்தக் குறிப்பிட்ட கோணத்தில் உள்ள போது, பெரும்பான்மையான நீல நிற ஒளி, மற்ற பிற திசைகளில் சிதறடிக்கப்படுகிறது.

அப்போது, சிதறடிக்கப்படாமல் உள்ள



சிவப்பு நிறம் மட்டுமே நம் கண்களுக்குத் தெரிகிறது. இதனால்தான் சூரியன் மற்றும் அதைச் சுற்றியுள்ள தொடுவானத்தின்பகுதிகள் நம் கண்களுக்கு செந்நிறமாகக் காட்சியளிக்கின்றன.

# தமிழில் உள்ள ஓரெழுத்துச் சொற்கள்



தமிழில் ஓர் எழுத்தில் அமையும் சொற்கள் எத்தனை உள்ளன என்று தெரியுமா?

நம்மில் பலர் அத்தகைய சில சொற்களை அறிந்திருப்போம். உங்களுக்குத்தெரிந்த ஓரெழுத்துச் சொற்களை எண்ணிப் பாருங்கள்!

ஓர் எழுத்து மட்டுமே சொல்லாக அமைந்துபொருள் தந்தால், அதற்கு ஓரெழுத்து ஒருமொழி என்றுபெயர். தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றானநன்னூலில், மொத்தம் 42 ஓரெழுத்துச் சொற்கள்தமிழில் உள்ளனஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாற்பத்திரண்டு சொற்களில், நொ மற்றும் து ஆகிய இரண்டு சொற்களைத்தவிர, மற்ற நாற்பது சொற்களும் நெடிலாக அமைந்துள்ளன.

ஓர் எழுத்து மட்டுமே பொருள் தரும் சொற்கள் இந்த அளவுக்கு அதிக எண்ணிக்கையில் அமைந்திருப்பது நம் செந்தமிழின் சிறப்புகளில் ஒன்று.

கீழ்க்கண்ட பட்டியலில் நாற்பத்திரண்டு ஓரெழுத்துச் சொற்கள் கொடுக்கப் பட்டுள்ளன:

ஆ (பசு)
ஈ (கொடு, படை, ஈனு, பூச்சி – பறக்கும் ஈ, தேனீ)
ஊ (இறைச்சி)
ஏ (அம்பு)
ஐ(தலைவன்)
ஓ (மதகுநீர் தாங்கும் பலகை)
கா(சோலை)
கூ (பூமி)
கை(ஒழுக்கம், கரம்)
கோ (அரசன்)
சா (இறந்துபோ)
சீ (இகழ்ச்சி)
சே (உயர்வு)
சோ (மதில்)
தா (கொடு)
தீ (நெருப்பு)
தூ (தூய்மை)
தே (கடவுள்)
தை (தைத்தல், தை மாதம்)
நா (நாவு)
நீ (முன்னிலை ஒருமை)
நே (அன்பு)
நை (இழிவு)
நோ (வறுமை)
பா (பாடல்)
பூ (மலர்)
பே (மேகம்)
பை (இளமை, பசுமை, கொள்கலம்)
போ (செல்)
மா (மரம்)
மீ (வான், மிகுதி)
மூ (மூப்பு)
மே (அன்பு)
மை (அஞ்சனம்)
மோ (முகத்தல்)
யா (அகலம்)
வா (அழைத்தல்)
வீ (மலர்)
வை (புல், இடு)
வெள (கவர்)
நொ (நோய்)
து (உண்)

# கல்விக்கதிர்

- அகரன் -

# பொன்மொழிகள்

» உண்மைகளை மறைக்கவோ திரிக்கவோ கூடாது.

» கோபத்தை மனதிற்குள் அனுமதிப்பது கூடாது. அமைதி வழியில் செல்லுங்கள்.

» உள்ளத்தில் உண்மை இருந்தால் தான். பேச்சில் அது வெளிப்படத் தொடங்கும்.

» கல்வியையும் தியானத்தையும் எந்த வயதில் தொடங்கினாலும் பலன் உண்டு.

» யாருக்கும்பயந்துஎமக்குதெரிந்தஉண்மைகளை மறைக்கவோ, திரிக்கவோ கூடாது.

» தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் பயனுள்ளதை செய்வதே உழைப்பு.

» நோயால் மனிதர்கள் சாவதை விட.. பயம், கவலையால் அதிகம் சாகிறார்கள்.

» தெய்வம் அருளைப் பொழியும் விதத்தில் உள்ளத்தை திறந்து வைத்திருங்கள்.

» இப்போதுசெய்யவேண்டியதை பிறகு பார்க்கலாம் என்று தள்ளிப் போடுவது கூடாது.

» தர்ம வழியில் வாழ்வு நடத்துங்கள். தர்மம் மட்டுமே உண்மை என உணருங்கள்.

» நம்பினார் கெடுவதில்லை. இது நான்கு வேதங்களும் சொல்லும் தீர்ப்பு.

» நம்பிக்கை மிக்கவனே சிறந்தவன்.

» உன்னைநீயேமனத்தால்துன்புறுத்திக்கொள்வது முட்டாள்தனம்.

» இயற்கையை நேசித்து வாழ வேண்டும். எல்லா உயிர்களையும் பாதுகாக்க வேண்டியது நம் கடமை.

» கொள்கையை சொல்வது எளிது. செயலில் பின்பற்றுவது சிரமமானது.

» மனதில் ஏற்றத்தாழ்வுக்கு இடம் அளித்தால் நிம்மதியை பெற முடியாது.

» தனக்கு தானே தலைவனாக இருப்பது தான், மனித உரிமையிலேயே மதிப்பு மிக்கது.

» இலவசமாககிடைக்கும்எதையும்பெற்றுக்கொள்ள புத்திசாலியின் மனம் விரும்புவதில்லை.

» அன்பை வளர்த்துக் கொண்டால் உலகத் துயரம் எல்லாம் எளிதில் மறைந்து போகும்.

» விழும் வேகத்தை விட எழும் வேகம் அதிகமாக இருந்தால், தோற்கடிக்க அல்ல, உன்னைப் பார்க்கவே எவனும் பயப்படுவான்.

» எவனையும் வெற்று காகிதம் என எண்ணாதே! ஒரு நாள் அவன் பட்டமாய் பறப்பான்.

» நம்பிக்கை இருக்குமிடத்தில் வெற்றி உண்டாகும் அந்த நம்பிக்கையின் அடிப்படை இலக்கணம் விடாமுயற்சி.

» எல்லா மனித முயற்சியிலும் ஆரம்பத்தில் தவறு ஏற்படுவது இயல்பானதே.

» காலம் பணத்தைப் போல விலை மதிப்பு கொண்டது. ஒருபோதும் பொழுதை வீணாகக் கழிப்பது கூடாது.

» உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா? பிரச்சினைகள் வரும்போது அல்ல, பிரச்சினைகளைக் கண்டு நீங்கள் பயந்து விலகும்போது

» துன்பம் நேரும் காலத்தில் உறுதி என்னும் கடிவாளத்தால் மனதை இழுத்து பிடியுங்கள்.

» எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவே வேராக இருக்கிறது. அறிவுக் கண் திறந்தால் எதையும் சாதிக்கலாம்.

» காயங்கள் குணமாகக் காலம் காத்திரு. கனவுகள் நினைவாகக் காயம் பொறுத்திரு.

» மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குமுறிய கடலுக்கு ஒப்பானது.

» எந்தச் சூழ்நிலையிலும் மற்றவருக்கு நீ தாழ்ந்து விடதே. அவ்வாறு தாழ்வது அவமானத்திற்குரியதாகும்.

» அச்சத்தின் வேட்கைதனை அழித்துவிட்டால் அப்போது சாவும் அங்கே அழிந்து போகும்.

» நாள்தோறும் ஏதேனும் ஒரு காரியத்தில் உடல் வியர்க்கும்படி உழைக்க வேண்டும்.

» எந்த ஏற்றத்துக்கும் ஒரு இறக்கம் உண்டு, எந்த துன்பத்துக்கும் ஒரு இறுதி உண்டு, எந்த முயற்சிக்கும் ஒரு பலன் உண்டு.

» எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் அச்சமில்லாது துணிவுடன் செய்யுங்கள்.

» வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

» இழிசெயல்கள் எதுவும் உங்களைப் பிடித்துத் தம்வழி இழுத்துக் கொண்டு செல்லாதபடி சதாகாலமும் விழிப்புடன் இருப்பீர்களாக, பயமின்றி உழையுங்கள். சலிப்புக்கு மட்டும் ஒருபோதும் இடம் கொடாதீர்கள்.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# பொறுமைக்கும், நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு

தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

"ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்" என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர், "இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து மோதகத்தை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்!" என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். "இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலிருந்து மோதகங்களைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே இரு" என்றார்.

மறுநாள், வேலைக்காரன் மோதகக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டிபோட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்த சிறுமி. தன் வீட்டிற்கு வந்தவள், தன் தாயிடம் அதைத் தந்தாள். அந்த மோதகத்தைப் பிய்த்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. "ஐயா! இது உங்கள் தங்கக் காசு. மோதகத்திற்குள் இருந்தது. பெற்றுக் கொள்ளுங்கள்!" என்றாள். அவள். "மகளே! உன் பெயர் என்ன "என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தன் பெயர் கிருசாம்பாள் எனக் கூறினாள். மகளே உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல் என்றார் செல்வர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள்.

எனவே, நாமும் பொறுமையாகவும், நேர்மையாகவும் இருந்தால் பெரியோர்களின் பரிசில்களைப் பெறலாம்.

# பூமியின் துருவப் பகுதிகள் மட்டும் ஏன் குளிர்ச்சியாக உள்ளன?

சூரியனின் ஒளிக்கதிர்கள் பூமியின் நிலநடுக்கோட்டுப் பகுதியில் செங்குத்தாக விழுகின்றன. இதனால் இப்பகுதியில் அதிக அளவில் ஒளி விழுகிறது. இது, சூரியவெப்ப ஆற்றலை அதிக அளவில் இப்பகுதிக்குக் கடத்த வழிவகுக்கிறது.

பூமி தன் அச்சைப் பொறுத்து 23.5 கோண அளவில் சாய்ந்து உள்ளது. இதனால், வட மற்றும் தென் தெருவப்பகுதிகளின் மீது விழும் சூரியனின் ஒளியளவு குறைவாக உள்ளது. இதன் விளைவாக, இப்பகுதிகளில் குறைவான அளவே வெப்ப ஆற்றல் கடத்தப்படுகிறது. ஆண்டு முழுவதும், இவ்வாறு வெப்பத்தின் அளவு குறைவாக இருப்பதால், துருவப்பகுதிகள் மிகவும் குளிர்ச்சியாகவும், இப்பகுதிகளில் உள்ள கடல் நீர் உறைந்து பனிப்பகுதியாகவும் காணப்படுகிறது.

மேலும், துருவப்பகுதிகளில் உள்ள வெண்ணிற பனிப்பாறைகள் சூரிய ஒளியை எதிரொளித்து விடுகின்றன. ஆனால், நிலநடுக்கோட்டுக்கு அருகிலுள்ள நிலப்பகுதியானது சூரிய ஒளியை அப்படியே உள்வாங்கிக் கொள்வதால், இப்பகுதி வெப்பமாக உள்ளது.

பூமியை நெருங்கும் சூரிய ஒளியானது, சாய்வாக உள்ள துருவப்பகுதியை அடையும் தொலைவு, நிலநடுக்கோட்டுப் பகுதியை அடையும் தொலைவை விட அதிகமாக இருப்பதால், அதிக அளவு வளிமண்டலத் துகள்களைக் கடந்து வருகிறது. இத்துகள்கள், ஒளிக்கதிர்கள் துருவப்பகுதியை அடையும் முன், அவற்றில் பெரும்பகுதியை சிதறடித்தும், உள்வாங்கியும் கொள்கின்றன. இதனால் துருவப்பகுதியை குறைவான வெப்ப ஆற்றலே சென்றடைகிறது.



# மழை



மழை வந்தால் மகிழ்ச்சியே
ஊரெல்லாம் குளிர்ச்சியே!

மயில் வந்து ஆடுமே
குயில் வந்து பாடுமே

வெள்ளம் அது ஓடுமே
பள்ளம் நோக்கிப் பாயுமே

பயிர்ச் செடிகள் செழிக்குமே
பூக்கள் எல்லாம் பூக்குமே

காய் கனிகள் காய்க்குமே
உயிர்கள் எல்லாம் உண்ணுமே!

# உலகிலேயே மிகப்பெரிய ஒரு செல் முட்டை

உலகிலேயே மிகப்பெரிய ஒரு செல் முட்டை நெருப்புக் கோழியின் முட்டை.

பொதுவாக முட்டை ஒரு செல்லாலானது. நெருப்புக்கோழியின் நெருப்புக்கோழியின் முட்டை உலகிலேயே மிகப்பெரிய ஒரு செல் ஆகும். இது சராசரியாக 15 செ.மீ நீளமும், 13 செ.மீ அகலமும் கொண்டது. இதன் எடை 1.4 கிலோகிராம் வரை இருக்கும். இது ஒரு கோழியின் முட்டையின் எடையை விட 20 மடங்கு கனமானது.



# நற்சிந்தனை துளிகள்

உழைப்பின் மீது நம்பிக்கை வைத்து கடமை ஆற்றினால் சோம்பல் சாம்பலாகி விடும்.

உழைப்பில் மனதை செலுத்தினால், எப்போதும் உற்சாகத்துடன் பொழுதைக் கழிக்கலாம்.

அச்சமில்லாத வாழ்வே ஆனந்தமான வாழ்வு. மனதில் பயம் என்னும் விஷம் நுழைய அனுமதிப்பது கூடாது.

உன் கட்டுப்பாட்டில் உன் உடம்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீ மிருகமாகி விடுவாய்.

நடைமுறைக்கு ஒத்துவராத விஷயத்தை ஞானம் என்று சொல்லுவது பிழை.

தியானம்செய்வதைதினசரிகடமையாக கொள்ளுங்கள். தியானத்தால் மனதில் துணிவும் ஆற்றலும் உண்டாகும்.

பிறர் நம்மை தாழ்வாக கருதவோ, நடத்தவோ இடம் அளிக்க கூடாது.

உண்மை பேசுவதை விரதமாக பின்பற்றுங்கள். சத்திய விரதத்தால் வாழ்வில் உயர்வு பெறுவீர்கள்.

தான் செய்த குற்றத்தை சுண்டைக்காய் போலவும் மற்றவர் குற்றத்தை பூசணிக் காய் போலவும் நினைப்பது கூடாது.

இயற்கையை மதித்து வாழ்ந்தால் எந்த தீமையும் உண்டாகாது. இது சாதாரண விஷயமல்ல. இதுவே உண்மை ஞானம்.

# வின்னி மண்டேலாவின் வாக்குமூலம்

## நூல் நோக்கு

நூலாசிரியர் - மு.தயாளன்

மகுடம் பதிப்பக வெளியீடு
வின்னி மண்டேலா



தென்னாபிரிக்கா நாட்டின் விடுதலை வீரன் நெல்சன் மண்டேலாவின் துணைவியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு சுயசரிதம் போன்ற அமைப்பில் இந்நூல் நகர்கின்றது.

நெல்சன் மண்டேலா கைதாகி சிறையில் அடைக்கப்பட்டதும், வெள்ளையர் அரசு வின்னி மண்டேலாவை படாதபாடு படுத்த ஆரம்பித்தது. 36 வயதுக்குள் பல முறை சிறைக்கு அனுப்பப்பட்டார். ஒரு முறை 491 நாள் சிறையில் அடைபட்டார்.

அனுபவித்த சிறைவாசம் பற்றி இப்படி எழுதுகிறார்.


“இந்த தண்டனையின்போது என் அறை மிகவும் சிறியது. கை கால்களை நீட்டினால் பக்கவாட்டு, மேற் சுவர்கள் இடிக்கும். யாரையும் சந்திக்கவிடாமல் தனிமைப்படுத்தப்பட்டேன். இது உயிருடன் என்னை கொல்வதற்கு சமம்! மூச்சு விட்டதால் நான் உயிருடன் இருந்தேன். ஆனால் என் மதிப்பு, மரியாதையெல்லாம் போனது. எனக்கு தெரியாத வலியே இல்லை. அந்த அளவுக்கு என்னை வெள்ளையர் அரசு பாடாய் படுத்தியது.'

இது மட்டுமா? 13 வருடங்கள் பிரன்ட்போர்ட் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு இருந்த வீட்டில் தண்ணீர், மின்சாரம் கிடையாது. வெள்ளையர் அரசுக்கு பயந்து அக்கம்பக்கத்தினர் உதவிக்கு வர மாட்டார்கள், பேசவும் மாட்டார்கள். ஒரே இடத்தில் திரும்பத் திரும்ப குத்தினால் என்ன ஆகும்? குத்திய இடம் மரத்துப் போகும்! நரம்புகளும் கூட, மரித்துப் போகும்!”அது மட்டுமல்ல 14 வயது இளைஞன் ஒருவன் கொலைக்கும், மற்றொரு நபர் கொலைக்கும், வின்னி மண்டேலாவே காரணம் என குற்றம் சாட்டப்பட்டார்.

வின்னி மண்டேலா வெள்ளையர்களுக்கே பயத்தின் அடையாளமாக திகழ்ந்த பெண்மணி, உண்மையில் ஆண்டாண்டு காலங்களாக அழுத்தப்பட்ட கறுப்பின மக்களின் விடுதலைக்கு மட்டுமன்று, ஒடுக்கப்படும் பெண்களுக்கும் அரசியலில் எவ்வாறு திறம்பட செயல்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர்.

துணிவாக வின்னி மண்டேலா வெள்ளையர்களின் போக்கிலே சென்று வெற்றியை தனதாக்கியவர்.

அடிமைகளாக தங்களை தாங்களே தாழ்த்தியது போதும் என்று அவருக்குள் எழுந்த பல கேள்விகளுக்கு விடையை கண்டுப்பிடித்து செயலில் காட்டியவர்.




வெள்ளையர்கள் வீதியில் செல்லும் போது கறுப்பர்களை கண்டால் விலகி நடக்கும் அளவிற்கு மாற்றத்திற்கு வித்திட்டவர். சமூக விடயங்களில் அக்கறை காட்டாமல் இருந்த வெள்ளையர்கள் வின்னி மண்டேலாவின் செய்கைகளால் கலங்கி போனார்கள். இது கறுப்பர்கள் மத்தியில் ஒரு வித மன உறுதியை அடையச் செய்தது.

கறுப்பின மக்களை உழுவு இயந்திரத்தை இயக்குவதற்காக குறைந்த வேதனத்தில் அடிமைகளாக நடத்தப்பட்டனர் வின்னி மண்டேலாவின் கைகளில் விலங்கிடப்பட்டப் போது அங்கே தான் கறுப்பின மக்களின் விடுதலைக்கான விதை விதைக்கப்பட்டது. வெள்ளையர் அதிகமாக வாழ்ந்த பகுதியில் வின்னி மண்டேலா அழைத்து வரப்பட்ட போது மாற்றம் நிகழத்தொடங்கிற்று.

வெள்ளையர்கள் எங்கு அதிகமாக கூடி இருந்தார்களோ அங்க அவளும் இருப்பாள்.

பசியால் பயங்கரமாக பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் நண்பர்களுடன் இணைந்து பசி போக்கும் பணியில் ஈடுபட்டாள் ஆனால் அதுவும் போதியளவு வசதியினை ஏற்படுத்தக்கூடியதாக அமையவில்லை. என்பதே கவலையே!

வைத்தியசாலை இருந்தும் மருத்துவர்களோ, மருந்துகளோ இல்லாமையால் கறுப்பின மக்கள் துன்பங்களிலே தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களாய் காணப்பட்டார்கள்.

வின்னி மண்டேலா ஒரு சம்பவத்தை இங்கே சொல்கின்றார் அவரால் தத்தெடுக்கப்பட்ட பெண்கர்ப்பமாய் இருந்த நேரத்தில் குழந்தையின் தலை திசை மாறி இருந்ததால் போதிய வைத் திய உத வியின்மையால் மரணத்தை தழுவியதாக குறிப்பிடுகின்றார்.

இந்நிகழ்வு அவர் மனதை குத்தி கிழித்தது. நிறவாதத்தின் கொடுமைகள் ஏற்றுக்கொள்ளவே முடியாவளாய் அவளுள் அடக்க முடியாத சுவாலை எரிய ஆரம்பித்திருந்தது.

வைத்தியசாலைகள் இருந்தும் கறுப்பர்களுக்கு சிகிச்சை என்பது மிக மிகக் கடினமாகவே இருந்தது.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மனிதாபிமான திட்டமாக உணவு சூப் வழங்க ஏற்பாடு வின்னி மண்டேலாவின் தலைமையில் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

கறுப்பின மக்களின் சுகாதார விடயங்களில் அக்கறை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகத் தொடங்கியது. தங்களுக்குத் தேவையான உணவுகளை வீட்டு தோட்டத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியுமாயிருந்தது. ஆனால் அடுத்த பிரச்சினையாக நீரினை பெறுவது. துன்பங்கள் தொடர்கதையானது. உலக நாடுகள் வேடிக்கை பார்த்தன. கடைசி ஆயுதமாக வின்னி மண்டேலா பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பெண்களை கிளர்தெழுச் செய்தார். போராட்டமே அவர் வாழ்க்கையானது. அபூர்வ பெண்மணியாக கறுப்பு தேசத்தின் அசைக்க முடியாத வீர மங்கையாளாள்.

அறவழி போராட்டம் ஆயுத போராட்டமாகியது. தன் கணவரின் மீதான காதல் பற்றிய அவரின் குறிப்பில் அருகருகே இருந்தும் அவர்களுக்கான உரிமை மறுக்கப்பட்டிருந்தது. நெல்சன் மீது கொண்ட காதல் அவருள் புதியதொரு சக்தி பரவுவதாகவும், இந்த சக்தியே அவரை உற்சாகமாக செயற்பட வைத்ததாகவும் குறிப்பிடுகின்றார். அவர்களின் வாழ்க்கை அழகாக மகிழ்ச்சியாக நகர்ந்த போதே வெள்ளையர்களால் சிறைக்கு செல்ல நேரிட்டது.

பேசப்படாத பல பாரோட்ட உண்மைகள் அவளுள் புதையுண்டு போனது.

### திருமண வாழ்வில் விரிசல்

1990-ல் நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து வந்ததும் இரண்டு ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தனர். 1992ல் பிரிந்து, 1996ல் விவாகரத்து பெற்றனர்.

1994ம் ஆண்டு முதல் 2003ம் ஆண்டு வரை தென்னாப்பிரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் வின்னி.

இறக்கும் வரைகூட நாடாளுமன்றத்தில் உறுப்பினராக தொடர்ந்தார்.

1994-96ம் ஆண்டுகளுக்கு இடையே கருப்பர் ஆட்சியில், இணை அமைச்சராக இருந்தார். ஆனால் ஊழல் குற்றச்சாட்டில் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இதனிடையே ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பெண்கள் அணிக்கு தலைவியாக இருந்தார். நெல்



சன் மண்டேலாவின் இறுதி காலத்தில் சிறிது காலம் அவருடன் சேர்ந்து வாழ்ந்தார். ஒடுக்கப்பட்ட பெண்மணியாக வாழ்ந்த வின்னிமண்டேலா நிச்சயம் ஒரு வித்தியாசமான பெண்மணி தான்!

இன்றும் தென்னாபிரிக்காவின் தேசிய அன்னை என மதிக்கப்படுகின்றார்.

**திருகோணமலை றொசில்டா அன்றோ.**

காலைக்கதிர் Kalaikkathir



ம.லர்ஷிகா
யாழ்ப்பான பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள் துறை.

# பறக்கும் மோட்டார் சைக்கிள்

றெக்க மட்டும் இருந்தா என் ஆளு தேவத சார் என்று வசனம் மட்டும் தான் பேசவில்லை மற்றபடி நெடுஞ் சாலைகளிலும் குறுக்கு பாதைகளிலும் ஊடறுத்து செல்லும் அதிவேக மோட்டர் சைக்கிள் இன்று இளைஞர்களை ஆட்டிப்படைக்கின்றது. பருவ வயதை எட்டி விட்டாலே போதும் ஆண்களுக்கு மோட்டார் சைக்கிள் மோகம்பிடித்து விடுகிறது. Royal Enfield, Apache, Yamaha, RX, Discover, Ducati என இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகும். பைக்கில் ஏறிவிட்டாலே ஆகாயத்தில் பறப்பது போல எண்ணி விடுகிறார்கள். பறக்கும் போது முன்னால் வருபவரையும் கூட வருபவரையும் கண்டு கொள்ளாமல் இறக்கை உடைந்து மண்ணை வாரும் சந்தர்ப்பங்களும் தவிர்க்க முடியாதது தான்.

சாலையோர பெண்களின் கவனத்தை திசை திருப்பவும் அதிகரித்துவரும் போதை பழக்கமும் அருகில் வரும் வாகனத்தை எட்டிபிடிக்க போடும் வேகச்சண்டையும் சில சமயங்களில் இவர்களுக்கும் பல சமயங்களில் தன்பால் சமந்தப்படாத இன்னொருவருக்கும் எமனாய் மாறி விடுகிறது. கடந்த வருடம் என் நண்பி ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானார். இது நடந்து மூன்று மாதங்கள் ஆன நிலையில் இதற்கான நீதி என்பது கிணற்றில் போட்ட கல் போலத்தான். விபத்துக்கு உள்ளாக்கியவர் பதினேழு வயது மதிக்கத்தக்கவர் என்பதால் நீதிமன்றம் உடனடி தீர்ப்புகளை வழங்கவில்லை. இது ஒரு புறம் இருக்க அந்த பெண்ணின் நிலை கேள்விக்குறியாகவுள்ளது. இரு கால்களும் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் இன்னொருவரின் அணைவில் வாழ்கிறார்.

யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்ற தனி மனித அலட்சியம் யாரோ ஒருவரின் பாதையையே மாற்றி விடுகிறது. முதல் எல்லாம் இந்த மோட்டார் சைக்கிள் இருக்கவில்லை அதற்காக போக்குவரத்து தடைப்பட்டதா? நமக்கு முன் இருந்தவர்கள் சைக்கிளிலும் மாட்டு வண்டியிலும் பஸ்சிலும் போகும் போதும் விபத்துக்கள் நடந்தது தான் ஆனால் அது தற்போதைய காலகட்டத்திலும் பார்க்கக் குறைவு தான். இன்று எங்கு திரும்பினாலும் வாகன விபத்தும் அலறல்களும் நிம்மதியை கெடுப்பது மட்டுமல்லாமல் பதற்றமான சூழலில் எம்மை வைத்துள்ளது. விபத்துக் களை முற்றும்முழுதாக தடுக்க முடியாது என்பதை நானும் அறிவேன் ஆனால் குறைக்கலாமே!

கொஞ்சம் மெதுவா போனால் என்ன? என்று யாராவது சொன்னால் அவர்களை Boomer Uncle என்று சொல்லி வாயடைக்க வைத்து விடுவார்கள். ஏன் இவ்வளவு வேகம்? என்றால் ‘இதெல்லாம் உனக்கு சொன்னா புரியாது மச்சான்’ என்று திரைப்பட வசனங்களை கோவையாய் கோர்த்து பேசி கெத்து காட்டுவார்கள். இதெல்லாம் இவர்கள் நன்மைக்கு தான் கூறுகிறார்கள் என்ற அறிவு மட்டும் இருக்கவே இருக்காது. இதற்கு முக்கிய காரணம் அவர்களை கண்டு கொள்ளாத பெற்றோரும் சரியாக அமையாத சமூகமும் தான்.

ஏன் மோட்டார் சைக்கிளில் இவ்வளவு வேகம்? என்று வாகனம் ஓட்டுபவர்களிடம் கேட்டால் என்னென்ன சொல்றான் பாருங்கஇ கம்பி கட்டுற கதை எல்லாம் சொல்றான். என்பது போலத்தான் அவர்களிடம் இருந்து வரும் பதில் இருக்கும். Bike இல் ஏறினாலே பறப்பது போல இருக்கும் என் ஆளுக்கு speed ஆ போனாதான் பிடிக்கும், இந்த வயசுல ஓடாம வேற எந்த வயசுல ஓடுற?, இதுல இப்படி தான் ஸ்பீடா போக வேண்டும் என ஒவ்வொருத்தரும் தனக்கேற்றால் போல் மெருகூட்டி சொல்வார்கள்.

Bike lover என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு அலையும் இவர்களிடம் இந்த விருப்பம் எங்கிருந்து வந்தது? தான் விரும்பிய கதாநாயகன் பைக் ஓட்டுவதாலா? இல்லை, தன் சக நண்பர்கள் பைக் ஓட்டுவதாலா? இல்லை, அவர்களுக்கு அடிப்படையில் இது அவசியமாகிறதா? என்ற கேள்விக்கு மட்டும் விடையில்லை. அடிப்படையில் அவசியம் என்றால் அதற்கு சாதரண பைக் கூட அளவானது. மைலேஜ் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை மற்றவர் முன் மானம் போகக் கூடாது என்பதில் மட்டும் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

பெரிய பைக்கில் முறுக்கி வரும் ஆண்களின் ஹீரோயிசம் பார்த்து வியக்கின்றோமே தவிர அதற்கு பின்னால் உள்ள அவர்களுடைய வலி, பண விரயம் மற்றும் சலிப்பினை யாரும் அறிவதே இல்லை. அதை அவர்களின் Money purse மட்டுமே அறியும். அப்பாவிடம் வாங்கிய பாக்கெட் மணியும் அல்லும் பகலுமாய் உழைத்த ஆபீஸ் மணியும் டீமைந Bike serviceக்கு வாரி கொடுக்கும் போது அந்த வலி இருக்கே அந்த வலி. போன மாசம் தான் சத்தம் வருதுன்னு செய்தன் இப்ப பார்த்தா அடுத்த செலவு என்ற அவர்களுடைய சலிப்பில் எப்படியாவது செய்தே ஆக வேண்டும் என்ற ஒரு ஆவலும் இருக்கத்தான் செய்கிறது .



என்னதான் பைக் பற்றியும் பைக் ஓட்டுனர்கள் பற்றியும் நம் கருத்துக்க்களை சொன்னாலும் மிடில் கிளாஸ் வாலிபர்களின் மிகப்பெரிய கனவுஇ இந்த கடன் வாழ்க்கையில் எப்படியாவது சொந்தமாக பைக்கை வாங்கி விட வேண்டும் என்பது தான். இன்ஸ்டாகிராமில் ஒரு பதிவு பார்த்தேன் ஒரு ஆண் முதன் முதலில் சொந்தமாக பைக் ஓட்டும் போது பெறும் சந்தோசத்தை எந்த பேரழகியாலும் கொடுக்க முடியாது என்று இருந்தது அந்த பதிவு. அதிலிருந்து ஒன்று மட்டும் புலப்பட்டது. Bike is not just a word it’s an emotion. அவர்களுடைய ஆசைக்கு யாரும் தடை போடவில்லை அந்த உணர்ச்சிக்கு நடுவில் மற்றவர் உணர்ச்சிக்கும் மதிப்பு கொடுத்து கொஞ்சம் சிந்தித்தால் வீணாக போகும் உயிர்களை பாதுகாக்கலாமே. என்ற பகுத்தறிவு இருந்தால் போதுமானது என்பதே என் கருத்து.

காலைக்கதிர் Kalaikkathir

## திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி ..........







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன குருமுதல்வர், சிவகுரு ஆதீன குருமுதல்வர் வேலன் சுவாமிகள் யாழ் ஆயர் மற்றும் முஸ்லீம் மௌளபி ஆகியோரிடம் நேரில் சென்று கலந்துரையாடி ஆசிகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 65 உறுப்பினர்களை நீக்க ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த 65 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்தொடர்பான, ஒழுக்காற்று விசாரணை நிறைவடைந்த நிலையில், அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அவர்களின் கட்சி உறுப்புரிமையும், உள்ளூராட்சி சபை உறுப்புரிமையும் இரத்தாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்துறை செயலாளர் நிஸ்ஸங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## அடுத்த வருடம்தான் தேர்தல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய ரொட்டரி கழகத்தின் மாவட்ட பிரிவு ஏற்பாடு செய்த 32 ஆவது ரொட்டரி மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. நாட்டை அராஜகத்துக்குள் தள்ள இடமளிக்காமல் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கின்றோம்.

நாட்டின் பொருளாதாரம் விரைவில் வழமைக்குத் திரும்பும் என்று நம்புகின்றேன். இந்த வருட இறுதிக்குள் நாட்டில் ஜனநாயகம் தளராமல் செயற்படும் சமூகம் கட்டியெழுப்பப்படும்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு மக்கள் துன்பப்படுவதற்கு இடமளிக்கப்படப் போவதில்லை. அதற்கான சகல தீர்மானங்களையும் அரசு மேற்கொள்ளும்.

நான் ஜனநாயகத்தை மதிக்கும் தலைவர். ஆனால், ஜனநாயகத்துக்கு முதலில் பொது அமைதி தேவை. அதற்குச் சட்டம், ஒழுங்கைப் பேணுவது அவசியம்.

ஒரு நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லாமல் ஜனநாயகம் இருக்க முடியாது. ஜனநாயகத்துக்கு நிலையான பொருளாதாரம் அவசியம்.

சட்டம், ஒழுங்கு மற்றும் பொருளாதார மீட்சி இல்லாத நாட்டில் அராஜகமே தவிர ஜனநாயகம் இல்லை. நாட்டை அராஜக பாதைக்குக் கொண்டுசெல்ல ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன் – என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு –

தொலைபேசி இலக்கம்

076 443 8622





நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 06 சனிக்கிழமை 18.02.2023 கதிர் 353

## வடமராட்சி கிழக்கில் திடீர் சிவலிங்கம்



யாழ்., வடமராட்சிகிழக்கு, மருதங்கேணி – முடங்கு தீவுப் பகுதியில் இனந் தெரியாத நபர்களால் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இன்று சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் 2

# இது ஒற்றையாட்சி நாடு தீர்வும் அதற்குள்ளேதான்

## பிரதமரும் அடித்துக் கூறுகிறார்

இலங்கை ஒற்றையாட்சியுள்ள ஒரு நாடாகும். இதனை மாற்றியமைக்க முடியாது. சமஷ்டி மூலம் தான் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் எண்ணுவது தவறானது.

காலைக்கதிர் பத்திரிகைக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்களைப் பகிர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். பிரதான ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இதற்கு முழுமையான ஆதரவு.

இந்த நிலையில், இதனைக் குழப்பியடிக்கும் வகையில் தமிழ் அரசியல் தலைவர்கள் கருத்துக் களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும். 2



13 இற்கு எதிரான பிக்குகளின்

## 2 ஆம் கட்டப் போராட்டம் மிகிந்தலையில் ஆரம்பம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி மகா சங்கத்தினர் இரண்டாம் கட்டப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

13 இற்கு எதிரான மகாசங்கத்தினரின் போராட்டம் கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிலையில், 2ஆவது போராட்டத்தை மிகிந்தலையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை உலப்பனே சுமங்கல தேரர் உறுதிப்படுத்தினார்.

கொழும்பில் முதல் வேட்டாகவே 13 ஆவது திருத்தச் சட்டம் கொளுத்தப்பட்டது. அடுத்தகட்ட நகர்வுகள் அதிரடியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் 13 முழுமையாக அமுலாகுவதைத் தடுப்பதே எமது பிரதான நோக்கம். ஆனால் 13 முற்றாக நீக்கப்பட வேண்டும். அதுவரை போராட்டம் தொடரும் – என்றும் அவர் மேலும் கூறினார்.

## வாக்குரிமையை மீறினால் நீதிமன்றத்தை நாடுவோம்

### அரசுக்கு எதிரணி எச்சரிக்கை

தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். அதனைத்திட்டமிட்டுக் காலம் தாழ்த்துவது சட்டவிரோத செயற்பாடாகும். எனவே, மக்களின் வாக்குரிமையை மீறும் வகையில் அரசு செயற்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,



சட்டம் மற்றும் அரசமைப்புக்கமைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அரசு சட்டத்துக்கு விரோதமாகச் செயற்படுமானால் நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். அரசுக்குச் சட்டவிரோதமாகச் செயற்பட முடியாதல்லவா?

தேர்தல் என்பது மக்குகளின் அடிப்படை உரிமையாகும். அவ்வாறிருக்கையில் அதனைத்திட்டமிட்டுக் காலம் தாழ்த்துவது சட்டவிரோத செயற்பாடாகும். அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நீதிமன் குற்றத்தினுடையதாகும். அதற்கமைய நீதிமன்றம் மக்களின் 2

## வட்டாரங்களைக் குறைக்கும் புதிய தேர்தலை நடத்துங்கள்

### ஜனாதிபதிக்கு ஹசன் அலி கடிதம்

பொருளாதார நெருக்கடி, நிதிப் பற்றாக்குறை காரணமாக மார்ச் 9 தேர்தல் பிற்போடப்படும் நிலை ஏற்பட்டுள்ள பின்னணியில் வட்டாரங்களைக்குறைக்கும் புதிய எல்லை நிர்ணயத்தின் கீழ் குறைக்கப்பட்ட உறுப்பினர்களுடன் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான மு.த.ஹசன் அலி வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கு இது தொடர்பில் அவர் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நிதி பற்றாக்குறை காரணமாக ஒத்திவைக்கப்பட வேண்டிய ஒரு நிலமை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய தேவைகளை முதன்மைப்படுத்தவேண்டிய காரணத்தால் தேர்தலுக்கான நிதியையும் உடனடியாக ஒதுக்க முடியாது என நிதி அமைச்சுத் தெரிவித்துவிட்டதனால் தேர்தலுக்கான ஆயத்த வேலைகள் திடீரென இடைநிறுத்தப்பட்டு, 2

## ஐ.தே.க.வுக்கு புதிய யாப்பு

### கட்சியின் செயற்குழு அனுமதி

புதியதொரு கட்சி யாப்பைத் தயாரிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் கூடிய போது, இதற்கான அனுமதி 2

## ரயில் மோதி இளம் தாய் பரிதாபப் பலி

ரயில் மோதி இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் சம்பவம் வாத்துவ பொலிஸ் பிரிவில் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

தனியார் நிறுவனத்துக்கு வேலைக்குச் செல்வதற்காக ரயில் ஏற வந்த வஸ்கடுவ, சிரில் மாவத்தையைச் சேர்ந்த சி.டி.சமரவீர முதலிகே சிந்தா பிரியதர்னி என்ற 36 வயதுடைய தாயே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

மருதானை 2

## கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கேட்டு மட்டக்களப்பில் போராட்டம்




படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி மட்டக்களப்பு மாவட்டம் காந்தி பூங்கா சதுக்கத்தில் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டத்தில் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு – கிழக்கு – தெற்கு ஊடக அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். 2

## வட்டாரங்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபால் வாக்களிப்புக்கான காலவரையறையும்கூட நீடிக்கப்பட்டுள் ளது.

இந்த நிலையில் தேர்தல்கள் உடனடியாக நடைபெறும் சாத்தியம் அடுத்த பல மாதங்களுக்கு இல்லை என ஊகிக்க முடியும். இந்தப் பின்னனியில் ஏற்கனவே தங்களால் முன்வைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் தொகை குறைப்பு யோசனையானது தற்போது கவனத்தில் எடுக்கப்படுவது பொருத்தமாகவிருக்கும்.

8000 உறுப்பினர்கள் தொகையினை 4000 ஆகக்குறைப்பதன் மூலம் அடுத்த நான்காண்டுகளில் ஐந்து பில்லியன் ரூபாய்க்களை சேமிப்பதற்கு முடியுமென்று நீங்கள் கூறியிருந்தீர்கள். அதற்கான முதல் படியாக வட்டார எல்லை நிர்ணயத்துக்கும் நீங்கள் உத்தரவிட்டுள்ளீர்கள். அதற்கேற்ப எல்லை நிர்ணயப் பணிகள் தற்போது முடிவடைந்து விட்டதாக அறிகிறோம். நாட்டில் உள்ள பொருளாதார சிக்கல்கள் திட்டமிட்டப்படாத முறையில் கையாளப்பட்டதால் தற்போது அரச தொழில் வாய்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆயுதப்படைகளிலும், அரச சேவைகளிலும் ஆள்குறைப்பு செய்யவேண்டும் என சர்வதேச துறை சார்ந்த நிபுணர்கள் நிபந்தனைகளை முன்வைக்கின்றனர். இவ்வேளையில், 4000 உறுப்பினர்களாக கொண்ட புதிய உள்ளூராட்சி முறைமையை உடனடியாக செய்யப்படுவதற்கான உரிய நடவடிக்கையை துரிதப்படுத்துவதானது சிறந்த செயலாக சர்வதேச ஆலோசகர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

எனவே தேர்தலில் தாமதம் ஏற்படும் இந்தக் காலத்திற்குள் புதிய தேர்தல் வட்டார முறையினை சட்டபூர்வமாக்கி அதன் அடிப்படையில் அடுத்த உளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதனை கவனத்தில் கொள்வது நல்லது. அத்துடன் தேர்தலுக்கான புதிய தினத்தையும் தற்போதே அறிவிக்கவும் உங்களால் முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிட்டு வளப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் 5 பில்லியன் ரூபாயை உடனடியாக சேமிக்கக்கூடிய உங்களது இந்த முயற்சியை ஏற்றுக்கொள்வார்கள் என்பது திண்ணம் – என்றுள்ளது.

## வாக்குரிமையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குரிமையைப் பாதுகாக்கும் என்று நம் புகின்றோம்.

பொருளாதாரத்தைச் சீரழித்ததன் பின்னர் துரித தீர்வைக் காண முடியாது. ஓரிரு வருடங்களில் இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு விட முடியும் என்று எண்ண வேண்டாம்.

அவ்வாறு துரித தீர்வு எதுவும் இல்லை. நாட்டில் தற்போது ரூபாவும் இல்லை, டொலரும் இல்லை. இன்னும் நீண்ட காலத்துக்கு எவ்வித பேதமும் இன்றி அனைவரும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கை ஒரு பௌத்த நாடாகும். எனவே, புத்த சாசனத்தைப் பாதுகாப்பவர்களையே மக்கள் தெரிவு செய்வர். கடந்த காலங்களில் சுமார் 50 பௌத்த தேரர்களைக் கொலை செய்த ஜே.வி.பி.க்கு மக்கள், ஆட்சி அதிகாரத்தை வழங்கப்போவதில்லை – என்றார்.

## வடமராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெள்ளிக்கிழமை இரவு குறித்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், குறித்த பகுதி ஊடாகப் பயணிப்போர் வாகனங்களில் இருந்து இறங்கி சிவலிங்கத்துக்குப் பூ வைத்து, கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்து வழிபட்டுச் செல்கின்றனர்.

## ரயில் மோதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிச் செல்லும் ரயிலில் பயணிக்க வந்த அவர், கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த 940 இலக்க ரயில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஐ.தே.கவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. கட்சிக்கான யாப்பைத் தயாரிப்பதற்காக முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன, தயா பெல்பொல, ரொனால்ட் பெரேரா மற்றும் நிஷாங்க நாணயக்கார ஆகிய ஜனாதிபதி சட்டத்தரணிகளை உள்ளடக்கியவகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

## கொல்லப்பட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்ட ஊடவியலாளர்களுக்கு நீதிகேட்கும் தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றும் அங்கு ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காகக் கையளிக்கப்பட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரனிடம் இந்த மனு வழங்கப்பட்டது.

அந்த மனுவில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கில் ஊடகசுதந்திரத்தை பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கு சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் சமரசம் செய்துகொள்ள தயாராக இல்லை.

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

2000ஆம் ஆண்டில் பிபிசி செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டதோடு அரங்கேறிய ஊடகப் படுகொலைகள் நீண்டுகொண்டே சென்றிருந்தன.

தமிழர் தாயகப் பகுதிக ளில் பல ஊடகவியலாளர்கள் மற் றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும், அந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை.

வடக்கு, கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண நாம் தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டுமென மீண்டும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை நல்லாட்சி காலத்தில் தாங்கள் பிரதமராக இருந்த காலப் பகுதியினில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களது குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடொன்றை வழங்க முன்வந்து விசாரணைக் குழுவொன்றையும் அமைத்திருந்தீர்கள். குழுவும் விசாரணைகளை முன்னெடுத்தபோதும் ஆட்சி மாற் றத்தின் பின்னராக அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது. கோட்டாபய ராஜபக் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு விசாரணைக்குழுவே நியமிக்கப்பட்டிருக்கவில்லை என வாதிடப்பட்டிருந்தது.

தற்போது தாங்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் தங்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம், கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களது குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணத்தை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இது ஒற்றை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்களைப் பேசுவதை நிறுத்திவிட்டு அரசுடன் ஒன்றிணைந்து பயணிக்கத் தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும்.

நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பயணத்தில் அனைவரினதும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். இதன்போது நிபந்தனைகளை முன்வைப்பது நல்லதல்ல – என்றார்.

ஒற்றையாட்சிக்குள்ளே அதிகபட்ச அதிகாரத்தை பகிரத் தான் தயாராக இருக்கிறார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெப்ரவரி 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையில் தெரிவித்திருந்தார்.

அதனைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்திருந்தனர். ஒற்றையாட்சிக்குள் உச்ச அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமற்றது, எனவே சமஷ்டி அடிப்படையிலான தீர்வை மட்டுமே ஏற்போம் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னரே பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரப் பகிர்வு என்று தெரிவித்திருக்கிறார்.


தொலைபேசி இலக்கம்-
076 443 8622




நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியும் காலம் தாழ்த்தக் கூடாது

**அமெரிக்காவில் மீண்டும் ஒரு துப்பாச்சூட்டுச் சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். டேட் கவுண்டியில் உள்ள அர்கபுட்லா அணை சாலையில் வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் சரமாரியாகக் கண்டமேனிக்குச் சுட்டதில் இந்த 6 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.**

**துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் தனியாளாகத்தான் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டிருக்கிறார். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகின்றன என்று மாகாண ஆளுநர் தெரிவித்திருக்கிறார்.**

**அமெரிக்காவில் மனித உயிர்களுக்கு மரியாதை இல்லாது போய்விட்டது. அங்கு அடிக்கடி இப்படித் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. அங்குள்ள அரசமைப்பின் அடிப்படை உரிமைகளில்தனிநபர்ஒருவர்தனதுபாதுகாப்புக்காக துப்பாக்கி வைத்திருப்பது அனுமதிக்கப்பட்டிருப்பதால் அதைத் தடைசெய்வதற்கான சட்டங்களை இயற்ற முடியாமல் நாடாளுமன்றம் திணறுகின்றது. அப்படி சட்டங்கள் இயற்ற முற்படுகின்றபோதெல்லாம் யாராவது ஒருவர் உச்ச நீதிமன்றத்தை நாடி மக்களின் அடிப்படை உரிமையின் பேரால் அதனைத் தடுத்து நிறுத்தி விடுவதும் நடந்து வருகின்றது.**

**மக்களின் அடிப்படை உரிமை என்கிற பெயரில் மனப் பிறழ்வடைந்த சில நபர்களால் பலரது உயிர்வாழும் உரிமை மீறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.**

**அமெரிக்காவில்கடந்த48நாட்களில்73துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்கள் நடந்துள்ளன. 2022இல் மட்டும் துப்பாக்கி தொடர்பான வன்முறையில் 44,000 பேர் உயிரிழந்தனர். துருக்கி – சிரியாவில் ஏற்பட்டுள்ள பெரும் நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலத்திற்குச் சமமான எண்ணிக்கை இது. துருக்கி – சிரியாவில் நிகழ்ந்தது மனிதப் பேரவலம் என்றால், அமெரிக்காவில் வருடாந்தம் இப்படித் தங்களின் உயிர்களை இழக்கும் அப்பாவிகளின் சாவுகள் மனிதப் பேரவலம் இல்லையா?**

**சின்னஞ் சிறுவர்கள்கூட துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டுவந்து பாடசாலைகளில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் சுட்டுக் கொன்றிருக்கும் அவலங்கள் பலவும் அங்கு ஒவ்வொரு வருடமும் நிகழ்கின்றன.**

**உலகம்முழுவதும்மக்களாட்சியையும்மனிதஉரிமைகளையும்போதிக்கும்அமெரிக்கா தனது அப்பாவிக் குடிமக்களின் உயிர்வாழ் உரிமை தொடர்பிலும் கொஞ்சம் அக்கறை செலுத்தவேண்டும்.**

**"துப்பாக்கி வன்முறை ஒரு தொற்றுநோய். நாடாளுமன்றம் இப்போது இதற்கு எதிராகச் செயல்பட்டே ஆகவேண்டும். நமக்குத் தேவையானது துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தங்கள்" என்று அதிபர் ஜோ பைடன். இதற்கு முன்னர் இருந்த அதிபர்களிடம் இருந்தும் இதுபோன்ற வார்த்தைகளை இந்த உலகம் கேட்டிருக்கின்றது. கிளிங்டன், ஒபாமா என்று அந்தப் பட்டியல் நீண்டது. ஆனாலும் துப்பாக்கிகளால் ஏற்படும் சாவுகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. இனியாவது காலம் தாழ்த்தாது இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கைக்கு அமெரிக்கா செல்லவேண்டும்.**

# நவம்பருக்கு முதல் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முயற்சிக்கிறார் ரணில் விக்ரமசிங்க!

## சிறீதரன் எம்.பி. ஆரூடம்



ரணில் விக்ரமசிங்க நவம்பருக்கு முதல் ஜனாதிபதி தேர்தலை நடத்த முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி – கணேசபுரம் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் விளக்க கூட்டத்தில்உரையாற்றும்போதேஅவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் –

தேர்தல்நடக்குமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது. தேர்தல் எப்போதும் நடக்கலாம். நிச்சயம் நடக்கும்.

தற்போது தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் காலம் குறிப்பிடவில்லை. இது ரணில் அரசாங்கத்தின் நிகழ்ச்சியாகும்.

இவ்வாறுகுழப்பங்களைஏற்படுத்தி மக்களை திசை திருப்ப முனைவதன் ஊடாக தமது அரசியல் நகர்வை ரணில் செய்கின்றனர். தேர்தலுக்கு காசு இல்லை என்கின்றனர்.

தேர்தல் செலவுக்காக திரும்ப செலுத்தாத தொகையை வழங்கும் நடைமுறை உள்ளது. அதனை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.

இவ்வாறான நிலையில் 50 கோடி டொலரை சர்வதேச நாயணநிதியம் கொடுக்கும். இது வழமை.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 341 வட்டாரத்துக்கும் 340 விதமான வாக்குச் சீட்டுக்கள் தயாரிக்க வேண்டும். அது ஒன்றுதான் பெரிய வேலையாகும்.

இதேவேளை, 2 தேர்தலுக்கு அச்சடிக்கக் கூடிய பேப்பர் இருப்பதாகவும் அரச அச்சகம் கூறுகின்றது. அதற்கான கடன் விண்ணப்பத்தை எழுத்து மூலமாக கேட்கிறது.

எனவே இதில் பாரிய அரசியல் நிலவுகிறது. எதிர்வரும்நவம்பர் மாதத்தின் பின்பு ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடிய நிலை உள்ள நிலையில், ரணில் விக்ரமசிங்க நவம்பருக்கு முதல் ஜனாதிபதி தேர்தலை நடத்த முயற்சிக்கிறார்.

இந்த சூழலில், தான் மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உள்ளது.

இதேவேளை மஹிந்த குடும்பத்துக்கு ரணில் போன்ற ஒருவர் தேவை. அதே போன்று ரணிலுக்கும் அவர்கள் தேவையாக உள்ளனர்.

சகோதரரை ஜனாதிபதி ஆக்குவதைத்தவிர்த்து இவ்வாறானஒருவரை ஜனாதியாக வைத்திருந்தால் தான் தனது மகனை ஜனாதிபதி ஆக்கலாம் என மஹிந்தர் எண்ணுகின்றார்.

இதே நேரம் பஸில் அமெரிக்க பிரயா உரிமையை நீக்கிவிட்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயாராகிறார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, பங்குனிக்கு பின் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். மஹிந்த தரப்பு ரணிலுக்கு பிரச்சினை கொடுத்தால் இவ்வாறான நிலையும் உருவாகும்.

வரும் பங்குனியுடன் 2 அரை வருடங்கள் முடிகிறது. தேர்தலை நடத்த அரசால் முடியும். ஆனாலும் ரணிலுக்கு விருப்பமில்லை. அப்படி நடந்தால் ரணில் தோற்பார். அதனாலேயே இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. மின்கட்டண அதிகரிப்பால் தொழிற்சாலைகளின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலைகள் ஆள்களை குறைக்க முயற்சிக்கிறது. பல நிறுவனங்கள் ஆள்களை குறைக்கின்றன.

உணவு மற்றும் பொருள்களின் விலையும் அதிகரிக்கிறது. ஏன் இந்த விலையேற்றத்தை செய்கின்றனர்.

இதனால் சிங்கள மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இப்போது தேர்தல் வேண்டாம் என மக்களை திருப்புவதற்காகவே இந்த விலையேற்றங்கள்.

ஆனால் சுதந்திர தினதுக்கு பல கோடி செலவழிக்கின்றனர். யாழிலும் கொண்டாடுகின்றனர். தேசிய கீதம் இசைப்பதற்கு மாத்திரம் கோடிக் கணக்கில் செலவு செய்தனர்.

தேங்காயெண்ணெய், சீனியில் கோட்டா பெருந்தொகை பணத்தை கொள்ளையிட்டார். அதனை வேறு இடங்களில் முதலீடாக்கியுள்ளனர் எனவும்அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

# யானைகளுக்கு தொந்தரவு: இசை நிகழ்ச்சிக்குத் தடை!

ஹபரணை யானை வழித் தடத்துக்கு அருகில் நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் 20 ஆம் திகதி வரை ஆழமான ஜங்கிள் இசை மற்றும் கலாச்சார விழா எனும் பெயரில் இடம்பெறும் நிகழ்ச்சி தொடர்பில் பல்வேறு சூழல் ஆர்வலர்களால் நேற்றையதினம் (வெள்ளிக்கிழமை) ஹிங்குரக்கொட நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், பொலிஸ் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு பின்வரும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அங்கு 2007 ஆம் ஆண்டு பொலிஸ்மா அதிபர் சுற்றறிக்கையின் படியே மேற்படி ஆழமான ஜங்கிள் இசை மற்றும் கலாசார விழாவை நடத்த வேண்டும் எனவும், மேற்படி சுற்றறிக்கையின்படி நடத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க, 20 பேர் கொண்ட பொலிஸ் குழு மற்றும் 10 பேர் கொண்ட வனஜீவராசிகள் அதிகாரிகுழுவைநியமிக்குமாறும்பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதே நேரத்தில், மேற்படி நிகழ்வு நடைபெறும் எல்லையைத் தாண்டி அதனை நடத்தாதிருத்தல், ஒலிபெருக்கிகள் மற்றும் ஒலி எழுப்பிகள் பயன்படுத்தாமல், மேற்குறிப்பிட்ட விழாவை நடத்துதல் உள்ளிட்ட நிபந்தனைகளுடன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த பொலிஸ் சுற்றறிக்கையின்படி, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 80 (1) பிரிவின் கீழ் இரவு 10 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை ஒலிபெருக்கிகள் அல்லது ஏனைய சாதனங்களை பயன்படுத்த முடியாது.

மேற்படி 2007 பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கையை மீறினால், சம்பந்தப்பட்ட ஒலி உபகரணங்களை உடனடியாக கைப்பற்றி, 2007 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடவடிக்கை எடுக்கும் நிபந்தனையுடன் ஹபரணை பொலிஸாருக்கு உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில், மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ். எச். எம். ஹசன் ஹமீட் உடன் சட்டத்தரணி திருமதி நிானி உதேஷிகா ஆகியோர் ஆஜராகினர்.

ஆர்.ஏ.ஆர்.ஈ. அமைப்பு, வன விலங்குகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் மற்றும் சூழல் நீதிமையம் அமைப்பு ஆகியன இந்த வழக்கை தாக்கல் செய்ய பங்களிப்பு செய்திருந்தன. இந்த இசைக் கச்சேரி நிகழ்வால் வன விலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்படக் கூடிய கேடு விளைவிக்கும் நிலைமையைத் தடுக்க, சூழல் தொடர்பில் அக்கறை கொண்ட பலர் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 1.5 கிலோ ஹெரோயினுடன் கந்தானையில் ஒருவர் கைது!

கந்தானை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது ஒன்றரை கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 31 வயதுடைய ஆண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெற்கு படகம பகுதியில்பொலிஸ்விசேடஅதிரடிபடையின் கோனஹேனமுகாமிலுள்ளஉத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சோதனையொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த சோதனையின்போது சந்தேகநபரிடமிருந்துஒன்றரைகிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின், போதைப்பொருள் வர்த்தகத்தில் மூலமாக பெறப்பட்டாக சந்தேகிக்கப்படும் 23 ஆயிரத்து 900 ரூபா பணம், டிஜிற்றல் தராசுகள் – 2, கையடக்க தொலைபேசிகள் – 2, ஹெரோயின் போதைப்பொருளை பொதியிடக்கூடிய காட்போட் பெட்டிகள் – 3, குளு கன் – 1, அலுமினிய கவர்கள் – 2, சீல் செய்யப்படும் கருவி – 1, காசு எண்ணுவதற்கு பயன்படுத்தப்படும் இலத்திரனியல் கருவி – 1, வரவு செலவு குறிப்பேடு புத்தகம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.





# துருக்கியில் மட்டும் 40,000 பேர் இறப்பு

## பெரும் நிலநடுக்கத்தால்

துருக்கியின் தெற்கு, மத்திய பகுதிகளை பெப்ரவரி 6ஆம் திகதி தாக்கிய பெரும் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

ரிச்டர் அலகில் 7.8 புள்ளியாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் துருக்கியில்39,672பேரும்சிரியாவில் 6,000 பேரும் உயிரிழந்துள்ளனர்.

துருக்கி பூகம்பத்தில் அடுக்கும ாடி கட்டிடங்கள் சீட்டுக் கட்டு போல சரிந்து விழுந்துள்ளன. இந்தகட்டட இடிபாடுகளில் இன்னமும் பலர் சிக்கியுள்ளனர். 1

1நாட்களுக்குப்பிறகு துருக்கியின் அன்டாக்யா பகுதியில் 14 வயது சிறுவன் உஸ்மான் நேற்று முன்தி னம் மீட்கப்பட்டான். அதே பகுதி யில் மெஹமத்(26), முஸ்தபா (33) என்ற 2 இளைஞர்களும் உயிருடன் மீட்கப்பட்டனர். குடிநீர், உணவு இன்றி பலவீனமான நிலையில் இருந்த 3 பேரும் உடனடியாக மருத்துவம னையில் சேர்க்கப்பட்டனர்.

துருக்கியின் கரம்மான்மராஸ் பகுதியில் நேற்று முன்தினம் 17 வயது சிறுமி அலினா உயிருடன் மீட்கப்பட்டார். மிகவும் மோசமான நிலையில் இருந்த அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

# இந்தியாவுக்கான பயணத்தை நிறுத்தினார் ஈரான் அமைச்சர்

ஈரான் அயலுறவு அமைச்சர் ஹொசேன் அமீர் அப்துல் லாஹியான் தனது இந்தியப் பயணத்தை நிறுத்திவிட்டதாக அறிவித்துள்ளார். இந்திய அயலுறவு அமைச்சகமும், அப்சர்வர்ரிசேர்ச்ஃபவுண்டேன் என்ற அமைப்பும் இணைந்து அடுத்த மாதம் ஏற்பாடுசெய்துள்ள ''ரைஸினா டயலாக்'' நிகழ்ச்சியில் ஹொசேன் அமீர் கலந்து கொள்வதாக இருந்தது.

இந்த நிலையில், அந்த நிகழ்ச்சிக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த விளம்பர காணொலியில் ஈரானியப் பெண் ஒருவர் ஹிஜாபை எதிர்த்து தனது தலைமுடியை வெட்டுகின்றபோது அருகில் ஈரான் தலைவர் இப்ரஹிம் ரைஸிபடம்இருப்பதுபோலஒரு காட்சியும்இடம்பெற்றிருந்தது. இதனால், ஈரான் வெளியுறவு அமைச்சர் தனது பயணத்தை நிறுத்திவிட்டார்.

உலகின் பல பிரச்சினைகள் குறித்து இந்த நிகழ்ச்சியில் பேசப்படுவது வழமை. இந்த ஆண்டு பேசப்படவுள்ள விடயங்கள் தொடர்பாகவே அந்தக் காணொலி சிறு முன்னோட்டைத்தைக் கொடுத்தது. அதில் ஈரான் தொடர்பான காட்சி ஒரிரு செக்கன்கள்கூட இடம்பெற்றிருக்காது. இருந்தாலும் அதனை அகற்றும்படி ஈரான்அரசுசார்பில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நடக்கவில்லை. இதையடுத்து தனது பயணத்தை ஈரானிய அமைச்சர் நிறுத்திவிட்டார்.

இந்தக் காணொலி ஒரு மாதத்திற்கு முன்னதாகவே வெளியிடப்பட்ட நிலையில், அமைச்சரின் பயணம் நிறுத்தப்படுவதாக இப்போது ஈரான் அறிவித்துள்ளது.

ரைஸினா உரையாடல் மாநாடு (Raisina Dialogue) என்பது ஆண்டுதோறும் இந்தியா நடத்தும் உலகளாவிய விவகாரங்களின் மாநாடாகும். இந்த ஆண்டுக்கான மாநாடு மார்ச் 3, 4 திகதிகளில் நடக்கிறது.

# கருத்தடைக்கான சாதனங்களுக்கு ஆப்கனில் தடை

ஆப்கானிஸ்தானில் கருத்தடை சாதனங்களை விற்பனை செய்வதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனா. தலிபான்கள் ஆட்சியில் அடிப்படை உரிமைகள் மறுக் கப்பட்டு வரும் பெண்களுக்கு இது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இது குறித்து மருந்தக உரிமையாளாகள் மற்றும் மருத்துவப் பணியாளாகளை மேற்கோள் காட்டி ஊடகங்கள் தெரிவித்துள்ளதாவது:

ஆப்கானிஸ்தானின் இரண்டு முக்கிய நகரங்களில் கருத்தடை சாதனங்களை விற்பனை செய்ய மருந்தகங்களுக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனா். இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் தலிபான் ஆட்சியாளர்கள் வெளியிடவில்லை. என்றாலும், வீடு வீடாக சென்று மருத்துவப் பணியாளாகளுக்கும், பேறுகால உதவியாளாகளுக்கும் இது தொடாபான உத்தரவுகளை தலிபான்கள் பிறப்பித்து வருகின்றனா.

கருத்தடை மாத்திரைகளை இருப்பு வைத்திருக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ள தலிபான்கள், அதனை உறுதி செய்வதற்காக மருந்தகங்களில் அவ்வப்போது சோதனைகளையும் மேற்கொண்டுவருகின்றனா.

கருத்தடை சாதனங்களுக்கான தடையை காபூலிலும், மஸார்-இ-ஷெரீஃப் நகரிலும் தற்போது தலிபான்கள் தீவிரமாக செயல்படுத்திவருகின்றனா.

விரைவில் நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் இந்தத் தடை விரிவுபடுத்தப்படலாம் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் கருத்தடை சாதனங்கள் விற்பனை செய்வது மேற்கத்திய நாடுகளின் சதித்திட்டம் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனா.

''கருத்தடை மாத்திரைகள் மற்றும் பிற சாதனங்கள் அனைத்தும் உலகில் முஸ்லிம் மக்கள் தொகையைக் குறைப்பதற்காக மேற்கத்திய நாடுகள் உருவாக்கியவை. எனவே அவற்றை யாரும் விற்பனை செய்யக்கூடாது'' என்று தலிபான்கள் மிரட்டி னர் என மருந்தக உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

# மீண்டும் துப்பாக்கிச் சூடு அமெ.வில் 6 பேர் இறப்பு



அமெரிக்காவில் மிசிசிப்பி மாகாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

டேட் கவுண்டியில் உள்ள அர்கபுட்லா அணை சாலையில் வெள்ளிக்கிழமை இரவு தொடர் துப்பாக்கிச் சூடு நடந்தது. அப்பகுதியில் கடையில் இருந்த நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் வீட்டில் இருந்த பெண் ஒருவர் கொல்லப்பட்டார். அவரது கணவருக்கு இதில் காயம் ஏற்பட்டது. மொத்தம் 6 பேர் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட்ட அப்பகுதி மக்கள் பொலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து அங்கு விரைந்து வந்த பொலீஸார் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரைக் கைது செய்தனர்.

இதுகுறித்து மிசிசிப்பி மாகாண ஆளுநர் டேட் ரீவ்ஸ், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் தனியாளாகத்தான் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டிருக்கிறார். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகின்றன. உயிரிழந்தவர்களுக்கு என்பிரார்த்தனைகள் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவில் கடந்த 48 நாட்களில் 73 துப்பாக்கிச் சூடு சம்பங்கள் நடந்துள்ளன. இது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன், போதும்.. இந்த வருடத்தின் 48 நாட்களில் இதுவரை 73 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துவிட்டன. பிரார்த்தனைகள் மட்டும் போதாது. துப்பாக்கி வன்முறை ஒரு தொற்றுநோய். நாடாளுமன்றம் இப்போது இதற்கு எதிராக செயல்பட்டே ஆகவேண்டும். நமக்கு தேவையானது துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தங்கள் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டில் (2022) மட்டும் துப்பாக்கி தொடர்பான வன்முறையில் 44,000 பேர் உயிரிழந்தனர்.

# சாட் ஜிபிடி வருங்காலத்தில் உலகையே மாற்றியமைக்கும்

## பில்கேட்ஸ் எதிர்வுகூறல்



செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தளமான 'சாட் ஜிபிடி' உலகத்தில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவரும் என மைக்ரோசாஃப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில் குநுட்ப உல கில் செயற்கை நுண்ணறிவு தளமான 'சாட் ஜிபிடி' கடந்த நவம்பா மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகம் செய்யப்பட்ட சில நாள்களிலேயே மக்களிடம் இதற்கு மிகுந்த வரவேற்பு காணப்பட்டது.

'சாட் ஜிபிடி' என்பது செயற்கைநுண்ணறிவு(ஏ.ஐ) மூலம்உரையாடலில்தகவல் அளிக்கும் சேவை வசதி ஆகும். இதன் மூலம் பயனர்கள் கேட்கும் கேள்விகளுக்கு துல்லியமாக 'சாட் ஜிபிடி' பதிலளிக்கிறது.

மைக்ரோசாஃப்ட நிறுவனத்தின் தேடுபொறியான 'பிங்'இல் சாட் ஜிபிடியை இணைக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்காக, சாட் ஜிபிடியை உருவாக்கிய ஓபன் ஏ.ஐ. நிறுவனத்தில் பல கோடி டொலாகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் முதலீடு செய்துள்ளது.

இந்நிலையில், 'சாட் ஜிபிடி' குறித்து மைக்ரோசாஃப் இணை நிறுவனர் பில்கேட்ஸ் கருத்து தெரிவித்துள்ளார். 'சாட் ஜிபிடி' அலுவலகப் பணிகளை துரிதப்படுத்தும் என்றும் உலகையே மாற்றும் எனவும் பில்கேட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.



# ஈரானில் மீண்டும் போராட்டம்

ஈரானின் பல்வேறு நகரங்களில் அர சுக்கு எதி ரான போராட்டங்கள் பல வாரங்களுக்குப் பிறகு மீண்டும் நடைபெற்றது. ஈரானின் சாச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் கலாசார காவலர்களால் கடந்த ஆண்டு செப்டம்பரில் கைதுசெய்யப்பட்ட மாா்அமீனி (22), தடுப்புக் காவலில் இருக்கும்போதே உயிரிழந்தார்.

அதையடுத்து நாடு முழுவதும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன. இதில் 70 சிறாா்கள் உள்பட 517 போராட்டக்காராகள், 68 பாதுகாப்புப் படையினா உயிரிழந்தனா். போராட்ட வன் முறையில் ஈடுபட்டதாக பலருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் இருவா சர்வதேச எதிர்ப்புக்கிடையே கடந்த டிசெம்பர் மாதம் தூக் கிலிடப்பட்டனர்.

இந்த நிலை யில், போராட்டக்காராகள் தூக்கி லிடப்பட்டதன் 40ஆவது நினைவு தினத்தையொட்டி தலைநகர் தெஹ்ரான், அராக், இஸ்ஃபஹான், இஸே உள்ளிட்ட நகரங்களில் ஏராளமானவாகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

# கண்மூடித்தனமான தாக்குதலில் சிரியாவில் 46 பொதுமக்கள் சாவு

## ஐ.எஸ். அமைப்பு மீது குற்றச்சாட்டு

சிரியாவின் மத்திய பாலைவன மகாணமான ஹோம்ஸில் நடத்தப்பட்ட தாக்குதலில் 53 பேர் கொல்லப்பட்டனர் என்று அரசு ஊடகம் தெரிவித்தது. அவர்களில் 46 பேர் பொதுமக்கள்.

அல்-மீசோக்னா நகரின் தென்மேற் கில் உணவுப்பொருட்களை சேகரித்துக் கொண்டிருந்தமக்கள்மீதுஐ.எஸ். பயங்ரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.. இதில் 53 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பால்மைரா அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட உயிரிழந்தவர்களின் தலைகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்ததாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் 46 பேர் பொதுமக்கள். 7 பேர் படையினர். உயிரிழந்தவர்களின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன. காயமடைந்தவர்களில் சிலர் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நடந்துவரும் சண்டை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளித்து வருகிறது. ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள சில இடங்களில் சண்டை அவ்வப்போது நடந்து வருகிறது. அதன் எதிரொலியாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## கனடா, அமெரிக்காவைப் போன்று

# இலங்கை போர்க் குற்றவாளிகளுக்கு பின்லாந்தும் தடை விதிக்குமா?

### அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி

இலங்கையின் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக கனடா மற்றும் அமெரிக்காவைப்போன்று தமது நாடு தடைகளை விதிக்குமா? என்று பின்லாந்து அரசாங்கத்திடம் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசைன் அல்–ரயீ கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான கேள்விகளை பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசைன் அல்–ரயீ அந்நாட்டு அரசாங்கத்திடம் எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி, இலங்கை அரசாங்கத்தால் தமிழ்மக்களுக்கு எதிராகத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இனப்படுகொலை தொடர்பாகவும் அவர் அந்த எழுத்துமூல ஆவணத்தில் உள்ளடக்கியுள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான மிகக்குறைந்தளவிலான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கரிசனை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகப் பின்லாந்திலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் தடைகள் விதிக்கப்படுவதற்கு அவசியமான அழுத்தத்தை வழங்கியமைக்காக பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசைன் அல்–ரயீக்கு நன்றி தெரிவித்திருக்கும் தமிழீழ சர்வதேச இராஜதந்திரப்பேரவை, போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக ஏனைய சர்வதேச நாடுகளும் தடைகளை விதிக்க முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

## வருமானம் போதாதமையால் ஓட்டோ திருடிவிற்ற பொலிஸ்

திருடப்பட்ட ஓட்டோவை விற்பனைக்கு எடுத்துச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பயாகல பிரதேசத்தில் கைது செய்–யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவில் சாரதியாகக் கடமையாற்றியவர் என களுத்துறை பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, கடனை அடைப்பதற்கு வருமானம்போதுமானதாக இல்லாத காரணத்தால் இந்தத் திருட்டை செய்ய தூண்டியதாக தெரித்துள்ளார்.

## பால் – தயிர் – இறைச்சி விலைகள் இரட்டிப்பாகும்



பால், தயிர், இறைச்சி உள்ளிட்ட அனைத்துப் பொருள்களின் விலையும் இருமடங்காக அதிகரிக்கப்படவுள்ளன என தேசிய விலங்கு உற்பத்தியாளர் கள்சங்கம்தெரிவித்துள்ளது.

மின்சார கட்டணம் 66 வீதத்தால் அதிகரித்தமையே காரணம் என அதன் அழைப்பாளர் சுஜீவ தம் மிக்க தெரிவித்துள்ளார்.

கால்நடை உற்பத்தியாளர்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உறைவிப்பான்களைபயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும், மின்சாரக் கட்டண உயர்வால், குளிர்சாதனப் பெட்டிகளில் தங்களுடைய பொருள்களைவைப்பதற்கு பெரும்செலவினங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மத அடிப்படைவாதம் வேகமாக இலங்கையில் வளர்ந்து வருகிறது!

### அர்ஜீன் சம்பத் தெரிவிப்பு



இலங்கையில் மத அடிப்படைவாதம் வேகமாக வளர்ந்துவருவதாக தமிழக இந்து மக்கள் கட்சியின் நிறுவுநர் அர்ஜீன் சம்பத் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு வெள்ளிக்கிழமை வருகை தந்த அவர் ஊடகவி–யலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

தற்போதைய பொருளாதார சிக்கல்களில் இருந்து மீண்டெழுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பன்னாட்டு உதவிகள் இங்கேகிடைக்கப் பெறுகின்றன. இந்தியஅரசும் பெரியளவில் இலங்கைக்கு உதவி வருகின்றது.

குறிப்பாக வீதிகள், பஸ் வீதிகள், வீட்டுத்திட்டம் அத்துடன் கடன்கள் என்று பிரதிபலனை கருதாமல் பல உதவிகளை செய்து–வருகின்றது.

சீனாவும் பல விடயங்களை இங்கே செய்கின்றது, கொழும்பில் ஒரு கலாசார மண்டபத்தை அமைத்தார்கள். ஆனால் அதன் நிர்வாகத்தை அவர்களே வைத்துள்ளனர். ஆனால் இந்திய அரசால் அமைக்கப்பட்ட கலாசாரமண்டபத்தின் நிர்வாகத்தை இலங்கை அரசிடமே ஒப்படைத்திருக்கின்றது. இருப்பினும் அதனை யாழ்பாண மாநாகரசபையிடம் ஒப்படைத்திருக்கவேண்டும்.

அத்துடன் வறுமை, பொருளாதாரப் பிரச்சனைகளில் இருந்து இலங்கை மக்கள் விடுபட வேண்டும். அதற்குரிய மேம்பாடான திட்டங்களை வகுத்து நல்லவிதமாக செயற்படுவதற்கான பிரார்த்தனைகளை நாம் செய்கிறோம்.

இதேவேளை இலங்கையில் மத அடிப்படைவாதம் வேகமாக வளர்ந்து–வருகின்றது. இங்கு வசிக்கும் சிங்கள மக்களாக இருக்கலாம், தமிழ்மக்களாக இருக்கலாம் அனைவரும் மண்ணின் மைந்தர்கள். ஆனால் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து மத மாற்றும் செயற்பாடுகள் இங்கு இடம்பெறுகின்றன.

அண்மையில் இடம் பெற்ற ஈஸ்டர் தாக் குதல் உலகையே உலுக்கியிருந்தது. எனவே மத வாதம், பயங்கரவாதம், ஆயுதகாலாசாரம்முடிவிற்கு வரவேண்டும். அமைதியான வளமான இலங்கை உருவாகவேண்டும். –எனக் கூறினார்.

## மக்களாட்சிக்கு மாறாக செயற்பட அரசுக்கு எந்த உரிமையும் இல்லை

### லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்



தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். அதனை மீறுவது சட்ட விரோத செயற்பாடாகும். எனவே மக்களின் வாக்குரிமையை மீறும் வகையில் அரசாங்கம் செயற்படுமாயின் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சட்டம் மற்றும் அரசமைப்பிற்கமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அரசாங்கம் சட்டத்துக்கு விரோதமாக செயற்படுமானால்நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். அரசாங்கத்துக்கு சட்ட விரோதமாக செயற்பட முடியாதல்லவா?

தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். அவ்வாறிருக்கையில் அதனைத் திட்டமிட்டு காலம் தாழ்த்துவது சட்ட விரோத செயற்பாடாகும். அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தினுடையதாகும். அதற்கமைய நீதிமன்றம் மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் என்று நம்புகின்றோம்.

பொருளாதாரத்தை சீரழித்ததன் பின்னர் துரித தீர்வைக் காண முடியாது. ஓரிரு வருடங்களின் இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு விட முடியும் என்று எண்ண வேண்டாம்.

அவ்வாறு துரித தீர்வு எதுவும் இல்லை. நாட்டில் தற்போது ரூபாவுமில்லை, பொலரும்இல்லை. இன்னும் நீண்ட காலத்துக்கு எவ்வித பேதமும்இன்றிஅனைவரும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கை ஒரு பௌத்த நாடாகும். எனவே புத்த சாசனத்தை பாதுகாப்பவர்களையே மக்கள் தெரிவு செய்வர். கடந்த காலங்களில் சுமார் 50 பௌத்த தேரர்களை கொலைசெய்தஜே.வி.பிக்கு மக்கள் ஆட்சியதிகாரத்தை வழங்கப் போவதில்லை. – என்றார்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நாளைமறுதினம் குருதிக்கொடை

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா தலைமையில், மேலதிக மாவட்டச் செயலர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த்தின் வழிகாட்டலின் கீழ் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசரப்பிரிவில் ஏற்படுகின்ற குருதிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்கியில் "உதிரம் கொடுப் போம் உயிர் காப்போம்'' எனும் தொனிப்பொருளில் இந்த குருதிக் கொடை முகாம் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராணுவம், பொலிஸ், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட செயலகம், நில அளவை திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கவுள்ளனர்.

## திறைசேரி செயலர் மீது சட்ட நடவடிக்கையாம்!




தேர்தலுக்கு இடையூறு விளைவிக்க முயற்சித்தமைக்காக திறைசேரி செயலாளர் மற்றும் அரச அச்சக அதிகாரி ஆகியோர், சட்ட நடவடிக்கையை எதிர்கொள்வார்கள் என எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஊடகசந்திப்பில்பேசிய அவர் –

அமைச்சால் வெளியிடப்படும் எந்தவொரு சுற்றறிக்கைக்கும் மேலான நாட்டின் அதியுயர் சட்டம், அரசமைப்பு என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே நாடாளுமன்றம், அமைச்சரவை, அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அரச நிறுவனங்களின் தலைவர்கள்அரசமைப்பை மீற முடியாது என்றும் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தில் ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கி நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ள நிலையில் நிதியை நிறுத்தி வைக்க திறைசேரிக்கு சட்டபூர்வ உரிமை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி இல்லை என்றால், சுதந்திர தின நிகழ்விற்கு எதிர்வரும் பெரஹெரவிற்–கும் திறைசேரி எவ்வாறு நிதி வழங்கியது என்றும் எஸ்.எம்.மரிக்கார் கேள்வியெழுப்பியுள்ளார்.

# காலநிலை சவாலை எதிர்கொள்ள பசுமை நிதிக் குழு நியமிப்பு!





2023 ஆம் ஆண்டில் பசுமை நிதி திட்டங்களுக்கு நிதி திரட்ட, ஒரு வலுவான திட்ட வரைப்படத்தை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன தலைமையில் பசுமை நிதிக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ருவான் விஜேவர்தன தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கி நகரவும் நிதிஆதாரங்களைத் திரட்டுவதற்கு பசுமை நிதிக் குழு பணியாற்றவுள்ளது.

பசுமை நிதியத்தின் திட்ட வரைபடம், பசுமை நிதி, பசுமை பத்திரங்கள், காலநிலை நிதி போன்ற தற்போதைய செயல்முறைகள் அடங்கிய ஒரு தெளிவான நோக்கம், செயல்பாடு மற்றும் இலக்குகளுடன் ஒரே தளத்தில் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் மேற்படி கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன, மேலதிக செயலாளர் வெர்னன் பெரேரா உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# றோயல் – யாழ். இந்து கிரிக்கெட் கொழும்பில்

## அடுத்த வாரம்




கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி பாடசாலைகளின் 13 வய துக்குட்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சிநேக பூர்வ கிரிக்கெட் ஆட்டம் வரும் 24 ஆம் திகதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கொழு-ம்பு றொயல் கல்லூரி மைதானத்தில் இந்த போட்டி ஆரம்பமாக உள்ளது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஐக்கிய ராச்சிய பழைய மாணவர் சங்கத் தால் புனரமைக்கப்பட்ட கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் இவ்விரு பாடசாலைகளினதும் 19 வயதுக்குட்பட்ட அணிகள் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

# ஒரே நாளுக்குள் இந்தியாவும் சுருண்டது ஆஸி. சுழற்பந்துவீச்சாளர்கள் அபாரம்

டில்லியில் நடந்துவரும் இந்தி யா – ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் நேற்று இந்திய அணி ஆஸியை ஒரே நாளுக்குள் சுருட்டியது. பதி லுக்கு ஆஸ்திரேலியா இன்று இந்தி ய அணியை ஒரே நாளுக்குள் சுருட்டியது மட்டுமல்லாது ஒரு ஓட்டத்தால் முன்னிலையும் பெற்றது. முதல் இன்னிங்ஸில் இந்தியா சகல இலக்குகளையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. ஆஸ்திரேலியா நேற்று தனது முதல் இன்னிங்ஸில் 263 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று மாலையே தனது ஆட்டத்தை தொடங்கியிருந்த இந்தி ய அணியின் தொடக்க வீரர்களான ரோகித் சர்மா மற்றும் கேஎல்.ராகுல் இன்று காலையில் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்தி யாவுக்கு இன்று முதல் இலக்கு 46 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது. ராகுல் 17 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதில் ஒரு சிக்ஸர் அடக்கம். அடுத்து 53 ஓட்டங்களுக்குள் ரோகித் சர்மா வீழ்த்தப்பட்டார். 2 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவர் ஆட்டமிழந்தார்.

இந்திய தொடக்க வீரர்கள் இருவரையும் களத்தில் நிலைக்கவிடாமல் விரட்டியவர் ஆஸியின் சுழல் பந்துவீச்சாளர் லயன். இந்த ஆட்டத்தில் மூன்று சுழல் பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கியிருந்தது ஆஸி. அணி. அது அந்த அணிக்குப் பெரும் பயனுள்ளதாகவும் ஆட்டக்காரர்களாகக்களமிறங்கினர். வோனர் காயமடைந்து ஆட்டத்தி லிருந்து வெளியேறியதால் கெட் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கியிருந்தார்.

இந்திய அணியில் அக்ஸர் பட்டேல் தவிர வேறு எவரும் பெரிய ஓட்டஎண்ணிக்கையை நெருங்கவில் லை. பட்டேல் 115 பந்துகளில் 74 ஓட்டங்களைப் பெற்றார். 9 பவுண்டறிகளும் 3 சிக்ஸர்களும் அதில் அடக்கம். விராட் கோலி 44 ஓட்டங்களையும் அஸ்வின் 37 ஓட்டங்களையும் பெற்றனர். ஜடேஜா 26 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய எல்லா வீரர்களும் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் வெளியேறினர். இந்த ஆட்டத்திற்காகவே களமிறக்கப்பட்ட புஜாரா ஓட்டமெதுவும் எடுக்காமல் வாத்துநடையில் ஓய்வறையை அடைந்தார். அவரது 100 ஆவது டெஸ்ட் ஆட்டம் இது.

83.3 ஓவர்களில் இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸ் 78.4 ஓவர்களில் முடிவுக்கு வந்தி ருந்தது. எனினும் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் ஒரு ஓட்டத்தால் முன்னிலை பெற்றது.

அந்த அணியின் பந்துவீச்சாளர்களான நதன் லயன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மர்பி 2, குனேகன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை இந்தியா இன்னிங்ஸின் தொடக்கத்திலேயே தனது சுழல் பந்துத் தாக்குதலைத் தொடங்கி விட்டது. ரவிச்சந்திரன் அஸ்வினே இரண்டாவது இன்னிங்ஸின் முதல் பந்துப் பரிமாற்றத்தை வீசினார். வேகப் பந்துவீச்சாளர் மிக்கு 2 ஓவர்கள் மட்டுமே வீசக் கொடுத்த அணித் தலைவர் ரோகித் சர்மா அந்த முனையில் இருந்தும் சுழல் தாக்குதலை மாலையிலேயே அறிமுகப்படுத்தினார். ஜடேஜா களமிறக்கப்பட்டு இரு புறங்களிலும் இருந்த ஆஸி. அணி வீரர்களுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது. ம ங்கல் ஒளியில் விக்கெட்டுக்களை வீழ்த்தி நெருக்கடி கொடுப்பதே இந்தி ய அணித் தலைவரின் உத்தியாக இருந்தது.

அதற்குக் கைமேல் பலனும் கிடைத்தது. ஜடேஜாவின் முதல் பரிமாற்றத்தின் 5 ஆவது பந்தில் கவாஜா ஆட்டமிழந்தார். ஆஸி. அணி 23 ஓட்டங்களுக்குத் தனது முதல் இலக்கை இழந்தது. பவுண்டறி உட்பட 6 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவர் ஐயரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இந்தியா சுழல் பந்துவீச்சா ளர்களை மாலை மங்கல் நேரத்தில் ரோகித் சர்மா பயன்படுத்தியைத் தனக்கும் சாதமாக்கிக்கொண்டு நன்றாக அடித்தாடினார் கெட். இரவுப் பார்வையாளனாக வந்த லம்புஜ்ஜனும் அவருக்கு ஈடுகொடுத்து அடித்தாடினார். இதனால் ஆஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை ஒரு நாள் ஆட்டம் போன்று கிடுகிடுவென்று ஏறியது 40 பந்துகளில் 39 ஓட்டங்களை விளாசினார். 5 பவுண்டறிகள் ஒரு சிக்ஸர் அதில் அடக்கம். லம்புஜ்ஜன் 19 பந்துகளில் 6 ஓட்டங்கள் எடுத்தார்; 3 பவுண்டறிகள் உள்ளடங்கலாக. ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலிய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 61 ஓட்டங்கள் எடுத்தது.




இந்த டெஸ்ட் மட்சில் இன்னும் மூன்று நாட்கள் மீதமிருப்பதால் அனேகமாக இது வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும் போட்டியாகவே முடிவடையும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.



## ஏ.டி.பி. ஆஜென்ரீனா டென்னிஸ் தொடரில்

# அரையிறுதியில் கார்பிய – ஜுவான்

ஆடவருக்கான ஏ.டி.பி பியூனஸ் அயர்ஸ் டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டிகளில், அல்கராஸ் கார்பியா மற்றும் ஜுவான் பாப்லோ வெரிலாஸ் ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பெருவின் ஜுவான் பாப்லோ வெரிலாஸ், இத்தாலியின் லோரென்சோ முசெட்டியை எதிர்கொண்ட போட்டியில், ஜுவான் பாப்லோ வெரிலாஸ், 6-4, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் அல்கராஸ் கார்பியா, செர்பியாவின் டுசான் லாஜோவிக்குடன் மோதியிருந்தார். இப்போட்டியில் அல்கராஸ் கார்பியா, 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றார்.

# டபிள்யூபிஎல் ஆர்சிபி அணி தலைவி மந்தனா

டபிள்யூபிஎல் போட்டிக்கான ஏலம் மும்பையில் நடைபெற்றது. இதில் இந்திய வீராங்கனைகள் மற்றும் வெளிநாட்டு வீராங் கனைகள் உள்பட மொத்தமாக 87 பேர் ஏலத்தில் தேர்வானார்கள். டபிள்யூபிஎல் போட்டி மார்ச் 4 முதல் 26 வரை மும்பையில் உள்ள இரு மைதானங்களில் நடைபெறவுள்ளது. 22 ஆட்டங்கள் நடைபெற வுள்ளன.

டபிள்யூபிஎல் போட்டியில் ஆமதாபாத், மும்பை, பெங்களூரு, தில்லி, லக் னௌ ஆகிய நகரங்களை முன்னிலைப்படுத்தும் அணிகள் போட்டியி டுகின்றன. குஜராத் ஜெயண்ட்ஸ் (ஆமதாபாத்) அணியை அதானி நிறுவனம் ரூ. 1,289 கோடிக்கும் மும்பை இந்தியன்ஸ் அணியை இந்தியாவின் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் ரூ. 912.99 கோடிக்கும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்க-ளூரு அணியை ராயல் சேலஞ்சர்ஸ் நிறுவனம் ரூ. 901 கோடிக்கும் தில்லி கேபிடல்ஸ் அணியை ஜேஎஸ்டபிள்யூ ஜிஎம்ஆர் நிறுவனம் ரூ. 810 கோடிக்கும் [illegible] ரூ. 757 கோடிக்கும் பெற்றுள்ளன.

டபிள்யூபிஎல் ஏலத்தில் இந்திய வீராங்கனை மந்தனா அதிகபட்ச ஏலத்தொகைக்குத் தேர்வானார். ரூ. 3.4 கோடிக்கு ஆர்சிபி அணி அவரைத் வாங்கியது.

இந்த நிலையில் ஆர்சிபி அணியின் கேப்டனாக மந்தனா நியமிக்கப்பட்டுள்ளார். ஆர்சிபி ஆடவர் அணியின் நட்சத்திர துடுப்பாளரான விராட் கோலியும் டு பிளெஸ்ஸிஸும் இத்தகவலை விடியோ வழியாகத் தெரிவித்துள்ளார்கள்.

இந்திய அணிக்கு டி20 ஆட்டங்களில் தலைமை தாங்கியுள்ள மந்தனாவுக்கு ஆறு ஆட்டங்களில் வெற்றிகள் கிடைத்துள்ளன. இதற்கு முன்பு மகளிர் டி20 சேலஞ்ச் போட்டியில் டிரையில் பிளேஸர்ஸ் அணிக்கு நான்குப் பருவங்களிலும் தலைமை தாங்கி, 2020 இல் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

# 2023 ஐபிஎல் ஆட்டம் மார்ச் 31 தொடக்கம்

2023 க்கான இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) போட்டி மார்ச் 31 முதல் தொடங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதலாவது போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் அஹமதாபாத் நரேந்திர மோதி அரங்கத்தில் இரவு 7.30 மணிக்கு விளையாடவுள்ளன.

இந்த ஆண்டுக்கான போட்டி அகமதாபாத், மொஹாலி, லக்னோ, ஹைதராபாத், பெங்க-ளூரு, சென்னை, டெல்லி, கொல்கத்தா, ஜெய்ப்பூர், மும்பை, கவுகாத்தி மற்றும் தர்மசாலா ஆகிய 12 மைதானங்களில் நடைபெற உள்ள இப்போட்டித் தொடரில் 70 லீக் போட்டிகள், 3 பிளே ஓப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டி அடங்கலாக மெ ாத்தமாக 74 போட்டிகள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அனைத்து போட்டிகளுக்குமான நேர அட்டவனைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

# பிரபல கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியன் அட்சு துருக்கி இடிபாடுகளிலிருந்து சடலமாக மீட்பு




துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியன் அட்சு தனது வீட்டின் இடிபாடுகளுக்கு அடியில் இறந்து கிடந்ததை அவரது தொடர்பாளர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

கானா நாட்டின் தேசிய கால்பந்தாட்ட வீரரான 31 வயது கிறிஸ்டியன் அட்சு, பிரீமியர் லீக் தொடரில் எவர்டன், செல்சியா மற்றும் நியூகாஸில் ஆகிய பிரதான அணிகளுக்காக விளையாடியுள்ளார்.

பெப்ரவரி 6 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்க அனர்த்தத்திலிருந்து தொடர்புகொள்ள முடியாதிருந்த கிறிஸ்டியன் அட்சு தற்போது அவரது அடுக்குமாடிக் குடியிருப்பு இடிபாடுகளிலிருந்து உடல மாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

கானா தேசிய அணிக்காக 65 போட்டிகளில் விளையாடியுள்ள அட்சு, 2015 ஆம் ஆண்டு ஆபிரிக்க நாடுகளின் கிண்ண தொடரில், அணி இறுதிப் போட்டிக்கு முன்னேற மிக முக்கிய வீரராக இருந்தார்.

# அதிக சிக்ஸர்கள் அடித்த ஸ்டோக்ஸ்

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 19 ஓட்டங்களும் 2 ஆவது இன்னிங்ஸில் 2 சிக்ஸர்கள் உள்பட 31 ஓட்டங்களும் எடுத்தார் இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்டோக்ஸ். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்களில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இதற்கு முன்பு 101 டெஸ்டுகளில் 107 சிக்ஸர்கள் அடித்து முதலிடத்தில் இருந்தார் நியூசிலாந்து முன்னாள் வீரரும் தற்போதைய இங்கிலாந்துத் தலைமைப் பயிற்சியாளருமான மெக்குல்லம்.

தற்போது 109 சிக்ஸர்களுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார் ஸ்டோக்ஸ். 100 சிக்ஸர்களுடன் 3 ஆவது இடத்தில் உள்ளார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18 .02.2023 இல் வெளியிடப்பெற்றது.